அலகு
11

# புரட்சிகளின் காலம்

S5L7I8

## கற்றலின் நோக்கங்கள்

கீழ்க்கண்டவற்றைப் பற்றி அறிந்துகொள்ளல்

- அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள், அதன் போக்கு, விளைவுகள் ஆகியவற்றை அறிந்துகொள்ளல்
- பிரெஞ்சுப் புரட்சி, அதற்கான காரணங்கள், போக்கு, ஐரோப்பாவின் மீதும் உலக நாடுகளின் மீதும் ஏற்படுத்திய தாக்கத்தினைப் புரிந்துகொள்ளல்
- லத்தீன் அமெரிக்க புரட்சியினை புரிந்துகொள்ளல்
- முதலில் இங்கிலாந்திலும் பின்னர் ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளில் நடைபெற்ற தொழிற்புரட்சியின் தொடக்கத்தை அறிந்துகொள்ளல்

## அறிமுகம்

நிலவியல் கண்டுபிடிப்புகள், மறுமலர்ச்சி, சமய மறுமலர்ச்சி, "முடியரசர்களின் காலம்" ஆகியவற்றின் காரணமாக, பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், உலகம் முழுவதிலும், அரசியல், சமய, சமூக, பொருளாதார நிலைகள் மாற்றமடையத் தொடங்கின. பதினெட்டாம் நூற்றாண்டு முடிவடைகின்ற தருவாயில் இரு புரட்சிகள் நடைபெற்றன. அவை அமெரிக்க புரட்சி (1775–83), பிரெஞ்சுப் புரட்சி (1789–95) ஆகியனவாகும். இப்புரட்சிகள் முடியாட்சிமுறை சார்ந்த அரசாங்கங்களுக்கு பெரும் வீழ்ச்சியைக் கொடுத்ததோடு, அதற்குப் பின்னரான மனிதகுல வரலாற்றின்மீது நிலையான தாக்கத்தினையும் ஏற்படுத்தின. இப்புரட்சிகள் மக்களின் வாழ்க்கையில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. அத்துடன் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமானது ஆலையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமாக மாற்றம்பெறும் புதிய காலகட்டத்தை அடைந்தது. மேற்சொல்லப்பட்ட, உலக முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளைப் புரிந்து கொள்ள இப்பாடம் நமக்கு உதவும்.

## 11.1 அமெரிக்க விடுதலைப் போர்

கண்டுபிடிப்புகளின் காலம் என்றறியப்படும் காலப்பகுதியில், துணிச்சல்மிக்க கடலோடிகள் புதிய உலகம் என்று சொல்லப்பட்ட நிலப்பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டதோடு, அரசர்களின் உதவியுடன் புதிய வணிகப்பாதைகளையும் கண்டுபிடித்தனர். இது மேம்பட்ட தொடர்புகளையும் லாபத்தையும் உறுதிப்படுத்தியது. புதிய இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளுதல், வணிக மையங்களை உருவாக்குதல், பின்னர் காலனிகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் தொடக்கத்தில் ஸ்பெயின், போர்த்துகல் ஆகிய நாடுகள் முன்னணி வகித்தாலும் இங்கிலாந்துதான் உலகம் முழுவதிலும் காலனிகளை ஏற்படுத்தி அவற்றை நீண்டகாலம் வெற்றிகரமாகவும் கட்டுப்படுத்தியது. வடஅமெரிக்காவில் ஆங்கிலேயர்களே முதன் முதலாக குடியேறினார்கள் என்றாலும், காலப்போக்கில் ஜெர்மானியர், ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்தோர், பிரெஞ்சுக்காரர்கள், இத்தாலியர்கள், டச்சுக்காரர்கள் ஆகியோரும் அமெரிக்கா சென்று குடியமர்ந்தனர். மிக விரைவாகப் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில், ஐரோப்பிய மக்கட்தொகைப் பெருக்கத்தை புதியஉலகில் உருவாக்கப்பட்ட காலனிகள், தங்கள் பக்கம் ஈர்த்துக் கொண்டன.



12th_History_TM_Unit_11_V2.indd 170 2/4/2020 10:56:57 AM



மேபிளவர் கப்பல்

அரசர் முதலாம் ஜேம்ஸ் வெர்ஜினியாவிற்கு ஒரு குழுவை அனுப்பி வைத்தார். அவர்களால் 1607இல் அங்கு ஒரு காலனி நிறுவப்பட்டு ஜேம்ஸ்டவுன் என பெயரிடப்பட்டது. பின்னர் யாத்ரீகர்கள் இங்கிலாந்திலிருந்து மேபிளவர் எனும் கப்பலில் பயணித்து மாசாசூசெட்ஸில் உள்ள பிளைமவுத் எனும் இடத்தில் காலனியை உருவாக்கினர். படிப்படியாக ஏனைய குடியேற்றங்களும் நிறுவப்பட்டன. 1624இல் டச்சுக்காரர்கள் ஹட்சன் ஆற்றின் முகத்துவாரமருகே ஒரு குடியேற்றத்தை நிறுவி அதற்கு நியூ ஆம்ஸ்டர்டாம் எனப் பெயரிட்டனர். பின்னர் இது ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்டு நியூ யார்க் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1700களில் குடியேற்றநாடுகளின் மக்கள்தொகையில் அடிமைப்படுத்தப்பட்ட ஆப்பிரிக்கர்களின் விழுக்காடு அதிகரித்தது.1770 காலப்பகுதியில் இங்கிலாந்திற்குச் சொந்தமான 13 வடஅமெரிக்கக் குடியேற்றங்களில் 2 மில்லியனுக்கும் அதிக எண்ணிக்கையிலான மக்கள் வாழ்ந்து, பலவேலைகளையும் மேற்கொண்டனர்.

1587இல் சர் வால்டர் ராலே என்பார் வடகரோலினாவிற்கு அருகே இருந்த ரோவனோக் தீவில் ஒரு குடியேற்றத்தை ஏற்படுத்தி, கன்னிமை அரசியான ராணியார் முதலாம் எலிசபெத்தின் நினைவாக வெர்ஜினியா எனப் பெயரிட்டார். ஆனால் பூர்வகுடி இந்தியர்களின் வலுவான எதிர்ப்பால் தொடக்கத்தில் குடியேறிய பலர் இங்கிலாந்து திரும்பினர். சில ஆண்டுகள் கழித்து ஆங்கிலேய மாலுமிகள் அங்கு சென்றபோது குடியேற்றம் இருந்தற்கான எந்தச் சுவடும் அங்கில்லை. ரோவனோக் தீவு இழக்கப்பட்ட குடியேற்றமானது.


### பதிமூன்று குடியேற்றங்களில் வாழ்க்கை

குடியேற்றங்கள் பெறப்பட்ட விதங்களிலும் அவற்றின் குணாதிசயங்களிலும் பெரும் வேறுபாடுகள் இருந்தன. அவை வடக்கு, தெற்கு

அட்லாண்டிக் கடலைக் கடந்த அடிமை வணிகம் மனிதகுல வரலாற்றில் படிந்த கறையாகும். பதினேழாம் நூற்றாண்டு பிறந்தபோது போர்த்துகீசியர்கள் ஆப்பிரிக்க அடிமை வர்த்தகத்தைத் தொடங்கினர். ஏனைய கிறித்துவ ஐரோப்பிய நாடுகளும் உடனடியாக பின் தொடர்ந்தன. அமெரிக்காவுக்குக் கொண்டுவரப்பட்ட முதல் அடிமைகள் 1619இல் ஒரு டச்சுக் கப்பலில் வந்தனர். "சந்தேக குணமில்லாத நீக்ரோக்களை" ஆப்பிரிக்காவில் கைப்பற்றி புதிய உலகிலுள்ள (அமெரிக்கா) பெருந்தோட்டங்களில் வேலை செய்ய அவர்களை விற்பதன் மூலம் பெரும் பணம் சம்பாதிக்க இயலும் என உணர்ந்த முதல் ஆங்கிலேயர் ஜான் ஹாக்கின்ஸ் ஆவார். அவருடைய செழிப்பான வெற்றி, பெரும் லாபம் ஆகிய காரணங்களால் முதலாம் எலிசபெத் அரசியால் நைட் பட்டம் சூட்டப்பட்டார். 11 மில்லியன்களுக்கும் மிகையான ஆப்பிரிக்கர்கள் அடிமைகளாக அமெரிக்காவைச் சென்றடைந்தனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

குடியேற்றங்கள் எனப் பிரிக்கப்பட்டன. வளமிக்க நிலங்களை இயற்கையின் கொடையாகப் பெற்றிருந்த தென்பகுதியில் வேளாண்மையே வாழ்வின் அடிப்படை ஆதாரமாகத் திகழ்ந்தது. ஆப்பிரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்ட அடிமைகளே அப்பெருந்தோட்ட நிலங்களில் பணிசெய்தனர். அந்நிலங்களில் பருத்தி, கோதுமை, புகையிலை ஆகியன முக்கியமாக விளைவிக்கப்பட்டன. மற்றொருபுறத்தில் வடபகுதிகள் வளமான விளைநிலங்களைக் கொண்டிருக்கவில்லை. அவை மர அறுவை ஆலைகளையும், கப்பல் கட்டும் நிலையங்களையும் தானிய அரவை ஆலைகளையும் உருவாக்கிக் கொண்டன. இரும்பும் துணியும் உற்பத்தி செய்யப்பட்டன. துறைமுகங்கள் கடல்சார் வணிகத்தை மேம்படுத்தின.

நிலையற்ற ஐரோப்பிய வாழ்க்கைச் சூழலினால் சலிப்புகொண்ட மக்கள் ஒரு சுதந்திரமான வாழ்க்கை வாழவேண்டும் என்பதற்காகவே குடியேற்றங்களுக்கு வந்தனர். அவர்கள் மத சுதந்திரத்தை அனுபவிக்க விரும்பினர். மேலும் தாங்கள் விரும்பிய மதத்தைப் பின்பற்ற விரும்பினர். (எ.கா. தூய்மைவாதிகள் – Puritans) குடியேற்ற நாடுகள் ஆங்கிலேய அரசால் பணியமர்த்தப்பட்ட ஆளுநர்கள் எனும் ஆங்கிலேயப் பிரதிநிதிகளால் ஆளப்பட்டன. ஆளுநர்கள் பாராளுமன்றத்திற்கு இணையான ஒரு சபையையும் (Assembly) பெற்றிருந்தனர். பெண்களுக்கு வாக்குரிமை




மறுக்கப்பட்டிருந்தது. ஆண்களிலும்கூட, சொந்தமாக நிலம் வைத்திருப்போர், வரி கட்டுவோர் ஆகியோர் மட்டுமே வாக்களிக்க முடிந்தது. தொடக்கத்தில் அவர்கள் அமெரிக்க இந்தியர்கள் என்றழைக்கப்பட்ட அமெரிக்காவின் பூர்வகுடி மக்களோடு இணக்கமான உறவைக் கொண்டிருந்தனர். (அப்போது அவர்கள் செவ்விந்தியர்கள் என ஏளனமாகக் குறிப்பிடப்பட்டனர்) ஆனால் காலப்போக்கில் பூர்வகுடிகள் நிலங்களை இழந்தோர்களாக ஆக்கப்பட்டனர் அல்லது அழித்தொழிக்கப்பட்டனர்.



பூர்வகுடிகளுடன் ஐரோப்பியரின் மோதல்கள்

1492இல் கிறிஸ்டோபர் கொலம்பஸ் கரீபியனை அடைந்த தருவாயில் அமெரிக்க பகுதிகளில் 10 மில்லியன் பூர்வகுடிகள் வாழ்ந்து வந்தனர். ஆனால் 1900இல் அவர்களின் எண்ணிக்கை 3,00,000 கீழாகக் குறைக்கப்பட்டது. பூர்வகுடிகளை அழித்தொழிக்க ஐரோப்பியர்கள் பின்பற்றிய தந்திரங்களில் ஒன்று நோய்களைப் பரப்புவதாகும். 1763இல் ஏற்பட்ட பெரும் எழுச்சி பென்சில்வேனியாவிலிருந்த ஆங்கிலப் படைகளை அச்சுறுத்தியது. தேவைப்படும் பொருட்கள் குறைவாக இருந்ததால் கவலையும் சில பூர்வகுடி அமெரிக்கர்களின் வன்முறைச் செயல்களால் சினமும் கொண்டிருந்த வட அமெரிக்காவிலிருந்த ஆங்கிலப் படைகளின் தளபதிசர்ஜெப்ரிஆம்ஹர்ஸ்ட்பென்சில்வேனியாவில், பிட் கோட்டையிலிருந்த கர்னல் ஹென்றி போகே என்பாருக்கு "போர்வைகளின் மூலமாக செவ்விந்தியர்களிடையே நோய்களைப் (அம்மை) பரப்பும் முயற்சியை நீங்கள் நன்றாகச் செய்யலாம். மேலும் ஒதுக்கத்தக்க இவ்வினத்தை வேரோடு பிடுங்கி எறிய வேறு முறைகள் அனைத்தையும் முயற்சி செய்யவும்" என எழுதினார். இதன் விளைவாக ஏற்கனவே அம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சொந்தமான அவர்கள் பயன்படுத்திய போர்வைகள் செவ்விந்திய பூர்வகுடிகளிடையே விநியோகம் செய்யப்பட்டன. காலனியவாதிகள் தங்கம் தேடும் முயற்சியில் (1848) பழங்குடி மக்களின் கிராமங்களில் பதுங்கியிருந்து கொடூரமாகத் தாக்கினர். குடியேற்றவாதிகளுக்கும் அமெரிக்க பூர்வ குடிகளுக்குமிடையே பல போர்கள் வெடித்து பெருமளவிலான உயிர்ச்சேதத்திற்கும், சொத்துப்பறிப்புக்கும், அடக்குமுறைக்கும் அப்பட்டமான இனவாதத்திற்கும் இட்டுச் சென்றது.

## அமெரிக்க விடுதலைப் போர்: காரணங்கள்

### காலனிய ஆட்சி: நாவாய் சட்டங்கள்

காலனிகளைத் தனது நாட்டின் பகுதிகளாகவே கருதிய இங்கிலாந்து, காலனி மக்களின் நலன்களைப் புறக்கணித்துத் தனது நலன்களுக்காகவே ஆட்சி செய்தது. நாவாய் சட்டங்கள் எனும் சட்டங்களை இயற்றியதன் மூலமாக இங்கிலாந்து தனது காலனி நாடுகளின் அனைத்துப் பொருட்களும் ஆங்கிலக் கப்பல்களின் மூலமாகவே ஏற்றுமதி செய்யப்பட வேண்டுமென கட்டாயப்படுத்தியது. காலனி நாடுகள் ஜவுளி போன்ற ஒரு சில பொருட்களை உற்பத்தி செய்வதைக் கட்டுப்படுத்தியும் தடுத்தும் சட்டங்கள் இயற்றப்பட்டன.

Z3X4V4


12th_History_TM_Unit_11_V2.indd 172 2/4/2020 10:56:57 AM

### ஏழாண்டுப் போர் (1756–63)

ஏழாண்டுப் போரில் இங்கிலாந்து தலையிட்டது இங்கிலாந்திற்கு எதிரான காலனிநாடுகளின் கிளர்ச்சிகளின் நேரடி விளைவாகும். போரின்போது காலனி நாடுகளின் சட்டமன்றங்கள் தாய்நாடு எதிர்பார்த்த மாதிரியான ஒத்துழைப்பை நல்கவில்லை. குறைந்த அளவிலான பொருட்களின் விநியோகத்தை மட்டும் ஏற்றுக்கொண்டு வாக்களித்த அவைகள் அமெரிக்கர்கள் பயன்படுத்தும் சில பண்டங்களின் மீது இங்கிலாந்து வரிவிதிக்க மேற்கொண்ட முயற்சிகளை எதிர்த்தன. இதனிடையே கனடாவை இங்கிலாந்து கைப்பற்றியதும் பிரெஞ்சுக்காரர்கள் குறித்த அச்சம் நீங்கியதும் இங்கிலாந்தைப் பாதுகாப்பாக இருப்பதாக உணர வைத்தது. மாறாக இந்நிகழ்வுகள் காலனி நாடுகளை அச்சங்கொள்ளச் செய்ததோடு, எப்போதுமில்லாத வகையில் இங்கிலாந்தின் கட்டளைகளுக்கு அவை அடிபணிய மறுத்தன.

### காலனி நாடுகளின் மீதான வரிவிதிப்பு

#### சர்க்கரை, சர்க்கரைப்பாகு ஆகியவற்றின் மீது வரிவிதிப்பு

ஏனைய ஐரோப்பிய நாடுகளோடு மேற்கொள்ளப்பட்ட நிரந்தர போர்களால் ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக இங்கிலாந்து தனது காலனி நாடுகளின் மீது புதிய வரிகளைச் சுமத்தியது. முதல் வரியானது 1764இல் சர்க்கரையின் மீதும் சர்க்கரையின் துணைப் பொருளான சர்க்கரைப்பாகின் மீதும் விதிக்கப்பட்டது. வடஅமெரிக்காவிலிருந்த அனைத்து காலனிகளும் இவ்வரியைச் செலுத்த கட்டாயப்படுத்தப்பட்டன. குடியேற்ற நாடுகள் "பிரதிநிதித்துவம் இல்லையேல் வரியுமில்லை" எனும் முழக்கத்தை எழுப்பி இதை எதிர்த்தன.

#### முத்திரைச் சட்டம்

1765இல் முத்திரைகள் மீதான புதிய வரிச்சட்டமொன்று அறிமுகம் செய்யப்பட்டது. இதன் மூலம் குடியேற்ற நாடுகளின் மக்கள் சட்டத் தொடர்புடைய அனைத்து ஆவணங்களிலும் வருவாய் முத்திரைகளை ஒட்டவும் முத்திரைகளை பயன்படுத்த வரிசெலுத்தவும் கட்டாயப்படுத்தப்பட்டனர். குடியேற்ற நாடுகளின் மக்கள் அவற்றை வாங்குவதற்கு மறுக்கவே ஆங்கில வணிகர்கள் குடியேற்றநாட்டு அரசுகளை அச்சட்டத்தை விலக்கிக்கொள்ள வற்புறுத்தின.

#### டவுன்ஷெண்ட் சட்டம்

1766இல் முத்திரைச் சட்டம் ஒழிக்கப்பட்டாலும் அடுத்த ஆண்டிலேயே ஒரு சட்டம் அறிமுகமானது. இதன்படி இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் சில பண்டங்களின் மீது வரிகள் விதிக்கப்பட்டது. இங்கிலாந்தின் நிதியமைச்சரான டவுன்ஷெண்ட் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தியதால் அவர் பெயரிலேயே இச்சட்டம் டவுன்ஷெண்ட் சட்டமென அறியப்படலாயிற்று.


#### பாஸ்டன் படுகொலை

1770இல் இங்கிலாந்தின் புதிய பிரதமரான நார்த் பிரபு தேயிலையின் மீதான வரியைத் தவிர ஏனைய பொருட்களின் மீதான வரிகளை நீக்கினார். இங்கிலாந்துப் பாராளுமன்றத்திற்கு குடியேற்ற நாடுகளின் மீது, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வரிவிதிக்கும் உரிமை உண்டு என்பதை உறுதிப்படுத்தவே தேயிலையின் மீதான வரி நீக்கப்படாமல் தொடர்ந்தது. பாஸ்டன் நகர வீதிகளில் ஆங்கிலப் படைகள் அணிவகுத்துச் சென்றபோது அமெரிக்கர்கள் ஆங்கிலேயரை விமர்சனம் செய்தனர். சினம் கொண்ட ஆங்கிலப்படைகள் அமெரிக்க மக்களுக்கு எதிராகச் துப்பாக்கிச்சூடு நடத்தின. இந்த பாஸ்டன் படுகொலை ஆங்கில அரசின் ஏகாதிபத்திய மற்றும் வலுச்சண்டை செய்யும் இயல்புகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது.

#### பாஸ்டன் தேநீர் விருந்து (1773)

பாஸ்டன் படுகொலையைத் தொடர்ந்து பூர்வகுடி அமெரிக்கர்களைப் போல வேடம் தரித்த 100 கிளர்ச்சியாளர்கள் பாஸ்டன் துறைமுகத்தில் தேயிலையைக் கொண்டு வந்திருந்த மூன்று கப்பல்களில் ஏறி 342 பெட்டிகளைக் கடலுக்குள் வீசி எறிந்தனர். இந்நிகழ்வு பாஸ்டன் தேநீர் விருந்து என அழைக்கப்பட்டது.

இங்கிலாந்துப் பாராளுமன்றம் கடுமையான எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டது. கேஜ் எனும் தளபதி மாசாசூசெட்ஸின் ஆளுநராகப்



பாஸ்டன் தேநீர் விருந்து



12th_History_TM_Unit_11_V2.indd 173 2/4/2020 10:56:57 AM

பணியமர்த்தப்பட்டார். காலனிகளை அடக்கி ஒடுக்கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டு படைகளும் அனுப்பி வைக்கப்பட்டன.

### பொறுத்துக்கொள்ள முடியாத சட்டங்கள் (1774)

பாஸ்டன் தேநீர் விருந்து நிகழ்வால் சினம் கொண்ட இங்கிலாந்துப் பாராளுமன்றம் பாஸ்டன் துறைமுக மசோதாவை நிறைவேற்றியது. அதன்படி கடலில் வீசப்பட்ட தேயிலைக்கான ஈட்டுத்தொகை காலனி மக்களால் வழங்கப்படும் வரை பாஸ்டன் துறைமுகம் மூடப்படுமென அறிவிக்கப்பட்டது. இரண்டாவதாக மாசாசூசெட்ஸ் அரசுச் சட்டத்தை இங்கிலாந்துப் பாராளுமன்றம் நிறைவேற்றியது. அதன்படி மாசாசூசெட்ஸின் தேர்தெடுக்கப்பட்ட சட்டமன்றம் கலைக்கப்படவும், ராணுவ ஆளுநர் கேஜ் என்பவரின் அதிகாரம் அதிகரிக்கப்படவும் வழிவகை செய்யப்பட்டது. மூன்றாவதாக நீதி நிர்வாகச் சட்டம் இயற்றப்பட்டு கடுமையான குற்றங்களைச் செய்தவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்ட ஆங்கில அதிகாரிகளை வேறு காலனிகளிலோ அல்லது இங்கிலாந்திலோ வைத்து விசாரிக்க அனுமதி வழங்கியது. நான்காவதாக இயற்றப்பட்ட பொறுத்துக்கொள்ள முடியாத சட்டம் ஏற்கனவே நடைமுறையில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்ட படைவீரர்கள் தங்குமிடச் சட்டம் என்பதன் மறுபதிப்பாகும். இச்சட்டம் காலியாகவுள்ள கட்டடங்களில் ஆங்கிலப்படைகள் தங்கிக்கொள்ள அனுமதி வழங்கியது. அடக்குமுறைச் சட்டங்கள் என்றும் அறியப்பட்ட இப்பொறுக்க முடியாத சட்டங்கள் (1774) காலனிகளிடையே பெரும் வன்முறை அலைகளை ஏற்படுத்தியது.

### கியூபெக் சட்டம்

1774இல் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட கியூபெக் சட்டத்தின்படி, ஓஹியோ மற்றும் மிசிசிபி ஆகிய இரு நதிகளுக்கு இடைப்பட்ட நிலப்பகுதி கியூபெக்கிற்கு வழங்கப்பட்டது. இதனால் நியூயார்க், பென்சில்வேனியா, வெர்ஜினியா ஆகிய அரசுகள் கோபம் கொண்டன. ஏனெனில் இதே நிலப்பகுதி இக்காலனியரசுகளுக்கு அரச பட்டயத்தின் மூலம் முன்னரே வழங்கப்பட்ட பகுதிகளாகும். மேலும் இப்புதிய பகுதியில் பிரெஞ்சுக் குடிமைச் சட்டங்களும், ரோமன் கத்தோலிக்க மதமும் செயல்பட இங்கிலாந்து அனுமதித்ததன் மூலம் பிராட்டஸ்டன்ட் காலனிகளையும் கோபம் கொள்ளச் செய்தது.

1774இல் இயற்றப்பட்ட பொறுத்துக்கொள்ள முடியாத சட்டங்களின் விளைவாக குடியேற்ற நாடுகள், பிலடெல்பியாவில் முதன்முதலில் பொது மாநாட்டைக்கூட்டின. ஜார்ஜியா நீங்கலாக மாநாட்டில் கலந்துகொண்ட ஏனைய குடியேற்றங்களின் பிரதிநிதிகள் பொறுத்துக்கொள்ள முடியாத சட்டங்கள் நீக்கப்படவேண்டுமென கோரிக்கை வைத்தனர். அதுவரையிலும் ஆங்கிலேயப் பொருட்களைப் புறக்கணிப்பது என்றும் காங்கிரஸ் (மாநாடு) முடிவு செய்தது. அவர்கள் இங்கிலாந்து அரசர் மூன்றாம் ஜார்ஜுக்கு கோரிக்கை மனுவொன்றை ஒரு ஆலிவ் கிளையோடு (அமைதி நடவடிக்கைகள்) அனுப்பி வைத்தனர். இதுவே ஆலிவ் கிளை விண்ணப்பமென அழைக்கப்பட்டது. ஆனால் அரசர் அமைதியை ஏற்படுத்த மறுத்துவிட்டார்.

### போர் வெடித்தல்

இதே சமயத்தில் 1775இல் மாசாசூசெட்ஸில் உள்ள லெக்சிங்டன் என்ற இடத்தில் விவசாயிகள் ஆங்கிலேயரோடு போரிட்டு பின்னர் பங்கர் குன்றிலிருந்த ஆங்கிலப் படைகளை முற்றுகையிடுவதற்காகப் பாஸ்டனை நோக்கி விரைந்தனர். 1776 ஜூலை 4இல் 13 குடியேற்ற நாடுகளும் இங்கிலாந்திடமிருந்து விடுதலை பெறுவதாக அறிவித்தன. சுதந்திரப் பிரகடனத்தை வடித்ததில் முக்கியப் பங்காற்றியவர் தாமஸ் ஜெபர்சன் ஆவார். அது அமெரிக்க ஐக்கிய நாடுகள் எனும் பெயரில் ஒரு சுதந்திர நாட்டின் வரலாறு தொடங்கியதை சுட்டிக் காட்டியது.


தாமஸ் ஜெபர்சன்

**சுதந்திரப் பிரகடனம் (1776)**

குடியேற்ற நாடுகள் சுதந்திர நாடுகளாக இருத்தல் வேண்டும் எனும் கருத்தை முன் மொழிந்தவர் ரிச்சர்டு லீ ஆவார். பிரகடனத்தை எழுதுவதற்கு வரைவுக்குழுவொன்று அமைக்கப்பட்டது. அக்குழு தாமஸ் ஜெபர்சன், பெஞ்சமின் பிராங்கிளின் மற்றும் ஜான் ஆடம்ஸ் ஆகியோரையும் உள்ளடக்கிய உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

ஆங்கிலேயப் படைகளுக்கு வில்லியம் ஹோவ் தலைமைதாங்க அமெரிக்கப்படைகளுக்கு ஜார்ஜ் வாஷிங்டன் தலைமையேற்றார். போரின் தொடக்கக் கட்டங்களில் ஹோவ் வாஷிங்டனை புரூக்ளின், நியூயார்க், நியூஜெர்சி ஆகிய இடங்களில் தோற்கடித்து வெற்றிகளை ஈட்டினார். பின்னர் வாஷிங்டன் தனது திட்டமிடப்பட்ட போர்த்



12th_History_TM_Unit_11_V2.indd 174 2/4/2020 10:56:58 AM

தந்திரங்களின் வாயிலாக ஆங்கிலப் படைகளைத் தோற்கடித்தார். 1777இல் சரடோகா போர் முனையில் ஆங்கிலேயப் படைத்தளபதி ஜெனரல் பர்கோய்ன் சரணடைய நிர்ப்பந்திக்கப்பட்டார். இறுதியில் 1781இல் யார்க்டவுன் என்ற இடத்தில் இங்கிலாந்துப் படைகள் அமெரிக்க படைகளிடம் சரணடைந்தன. இவ்வெற்றியோடு வடக்கேயிருந்த குடியேற்றங்கள் சுதந்திரம் பெற்றன. ஆனால் போர் முடிகின்ற தருணம் வரையிலும் ஹோவ் நியூயார்க்கை தன்வசமே வைத்திருந்தார்.



அமெரிக்க சுதந்திரப் போர்

### குடியேற்ற நாடுகளுடன் ஐரோப்பிய சக்திகளின் ஒருமைப்பாடு

அமெரிக்க சுதந்திரப்போரின் போது இங்கிலாந்துடன் நட்புறவு கொண்டிராத ஐரோப்பிய நாடுகள் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளை ஆதரிப்பதென முடிவு செய்தன. பிரஷ்யா, ஸ்வீடன், டென்மார்க் உள்ளிட்ட வட ஐரோப்பிய நாடுகள் இங்கிலாந்திற்கு எதிராக ஆயுதமேந்திய நடுநிலைமையை உருவாக்கின. ஒருபுறம் தனது எதிரி நாடுகளின் பகைமையையும் மறுபுறத்தில் நடுநிலை நாடுகளின் எதிர்ப்பையும் எதிர்கொள்ள நேர்ந்ததால் இங்கிலாந்து பெருங்குழப்பத்தில் ஆழ்ந்தது.

பிரெஞ்சுக்காரர்களும் அவர்களைத் தொடர்ந்து ஸ்பானியரும் டச்சுக்காரர்களும் இவ்விடுதலைப் போரில் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கு உதவினர். கனடாவை இழந்ததற்குப் பழிவாங்குவதாகவே பிரான்ஸ் அமெரிக்கர்களுக்கு உதவியது. குடியேற்ற நாடுகளுக்கு உதவி செய்வதற்காக அட்லாண்டிக் பெருங்கடலை கடந்து சென்ற பிரான்ஸ் நாட்டின் தன்னார்வத் தொண்டர்கள் தனிமனித சுதந்திரம் குறித்த கருத்துக்களோடு நாடு திரும்பினர். அக்கருத்துக்கள் அவர்களை போர்பன் மன்னர்களின் கட்டுப்பாடுகளைச் சகித்துக்கொள்ள முடியாதவர்களாக மாற்றின.

**தாமஸ் (டாம்) பெயின், பொது அறிவு (Common Sense)**

ஆங்கிலேயரான தாமஸ் பெயின் 'பொது அறிவு' (1776) எனத் தலைப்பிடப்பட்ட துண்டு பிரசுரமொன்றை எழுதினார். அதில் பெயின் குடியேற்ற நாடுகளின் கோரிக்கைகளை நியாயப்படுத்தி விவாதங்களை எழுதியிருந்தார். சுதந்திரம் குறித்து ஹாப்ஸ், லாக், வால்டேர், ரூசோ ஆகியோர் கூறிய கருத்துக்களைத் தேர்ந்தெடுத்த அவர் அவற்றை சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் விதத்தில் எழுதியிருந்தார். 1,50,000 பிரதிகள் விற்பனையான இத்துண்டு பிரசுரம், மக்களின் மீது கிளர்ச்சியூட்டும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

பணம் படைத்த வணிகர்களும், பெரும் நிலவுடைமையாளர்களும் ஆங்கில அரியணைக்கு விசுவாசிகளாக இருந்தனர். பெரும் எண்ணிக்கையிலான, குறிப்பாக நியூயார்க், பென்சில்வேனியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களின் மீதும் செல்வாக்கு பெற்றிருந்தனர். குடியேற்ற நாடுகளைச் சேர்ந்த மக்கள் இரு பிரிவினராகப் பிரிந்தனர். 'நாட்டுப்பற்றாளர்கள்' என்ற பிரிவினர் விடுதலை வேண்டினர். 'விசுவாசிகள்' என்ற பிரிவினர் இங்கிலாந்து அரியணைக்கு விசுவாசமாக இருக்க விரும்பினர். டோரிகள் (Tories) என்றழைக்கப்பட்ட விசுவாசிகள் ஆங்கிலிகன் திருச்சபையை சேர்ந்தவர்களாய் இருந்ததால் ஆங்கில ஆட்சியையே விரும்பினர். எனவே விடுதலைப் போருக்கு இடையில் ஒரு உள்நாட்டுப் போரும் தவிர்க்க இயலாமலாயிற்று.

### பாரிஸ் உடன்படிக்கை

போரைத் தொடர்வதால் பயனேதுமில்லை என இங்கிலாந்துப் பாராளுமன்றம் 1783இல் முடிவு செய்தது. பிரதமர் நார்த் பிரபு தனது பதவியை ராஜினாமா செய்தார். அரசர் ஜார்ஜ், மக்கள் சபை மீதான தனது கட்டுப்பாட்டை இழந்தார். புதிய பிரதமர் ராக்கிங்ஹாம் பிரபு அமைதிப் பேச்சுவார்த்தையைத் தொடங்கினார். 1783இல் இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்குமிடையே பாரிசில் அமைதி உடன்படிக்கை கையெழுத்தானது. ஜார்ஜ் வாஷிங்டன் (1732–1799) அமெரிக்காவின் முதல் குடியரசுத்தலைவரானார். அமெரிக்காவை உருவாக்கியவர்களில் ஒருவரான அவர் முதலில்



ஜார்ஜ் வாஷிங்டன்

ஒரு சிறந்த இராணுவத் தளபதியாகவும், பின்னர் மதிநுட்பம் நிறைந்த அரசியல்வாதியாகவும் அமெரிக்க புரட்சியில் முக்கியப் பங்கு வகித்தார்.



பாரிஸ் உடன்படிக்கை கையெழுத்தாதல்

**உடன்படிக்கையின் முக்கிய சரத்துக்கள்**

- 13 குடியேற்ற நாடுகளின் சுதந்திரத்தையும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் எனும் பெயரில் ஒரு புதிய நாடு உருவானதையும், இங்கிலாந்து அங்கீகரித்தது.
- மேற்கே மிசிசிபி ஆற்றை எல்லையாகவும், தெற்கே 31வது இணைகோட்டை எல்லையாகவும் கொண்ட பகுதிகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சொந்தமாயின.
- மேற்கிந்திய தீவுகள், இந்தியா, ஆப்பிரிக்கா ஆகியவற்றில் இங்கிலாந்திற்குச் சொந்தமாயிருந்த சில பகுதிகளை பிரான்ஸ் பெற்றது.
- ஸ்பெயின் இங்கிலாந்திடமிருந்து புளோரிடாவைப் பெற்றது.
- ஹாலந்தும் இங்கிலாந்தும் போருக்கு முன்பு நிலவிய நிலையை அப்படியே பேணின.

### அமெரிக்க புரட்சியின் முக்கியத்துவம்

- அமெரிக்க புரட்சி உலக வரலாற்றில் பல அணுகுமுறைகளை (Avenues) ஏற்படுத்தியது.
- மக்களாட்சி, குடியரசு போன்ற கோட்பாடுகள் மேலும் விரிவாகப் பரவலாயின.
- அரசியல், சமூக மாற்றங்கள் ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் அடிப்படையாக கொண்டிருந்தன.
- குடியேறியவர்கள் அனைவருக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் சுதந்திரத்தையும் வாய்ப்புகளையும் வழங்கும் நாடானது.
- கல்வியின் முக்கியத்துவம் சிறப்பிடத்தைப் பெற்றது.
- கூட்டாட்சிக் கோட்பாடு பரவலானது.
- அமெரிக்க புரட்சி காலனியாதிக்கத்திற்கு ஒரு பின்னடைவாகும். தங்கள் காலனிய எஜமானர்களுக்கு எதிராக குடியேற்ற நாடுகளின் விடுதலைக்கான கோரிக்கை உலகின் பல்வேறு பகுதிகளில் பரவியது.
- ஒவ்வொரு தனி மனிதருக்கும் பேச்சு சுதந்திரம், மத சுதந்திரம் மற்றும் சமவாய்ப்பு ஆகியன வழங்கப்பட்ட சுதந்திர சமுதாயம் உருவாவதற்கு இப்புரட்சி வழிகோலியது.

## 11.2 பிரெஞ்சுப் புரட்சி

பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பா பல்வேறு வம்சாவளிகளைச் சேர்ந்த முடியரசர்களால் ஆளப்பட்டது. அவ்வரசர்கள் முழுமையான அதிகாரம் செலுத்தினர். அவர்கள் நிலப்பிரபுக்கள், சமய குருமார்கள் ஆகியோருடன் பாரம்பரியமான உரிமைகளை அனுபவித்தனர். பிரான்சில் சாதாரண மக்கள் வரி செலுத்துவதைப் போல நிலப்பிரபுக்களும் மதகுருமார்களும் வரி செலுத்தவில்லை. இச்சூழலில்தான் பிரெஞ்சுப் புரட்சி நடைபெற்றது. அப்புரட்சி சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றிற்கு ஆதரவளித்தது.

### பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்ஸ்





பதினாறாம் லூயி மற்றும் மேரி அன்டாய்னட்

பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்னர் பிரான்சின் அரசியல் சமூக முறைகள் பண்டைய ஆட்சிமுறை என்றழைக்கப்பட்டது. ஆங்கில மொழியில் பழைய ஒழுங்கமைவு (old order) என்று பொருள். இவ்வாட்சியின் கீழ் ஒவ்வொருவரும் ஒரு பிரிவைச் (எஸ்டேட்– Estate) சேர்ந்தவர்களாய் இருந்தனர். அனைத்து உரிமைகளும் அந்தஸ்தும் மதகுருமார்கள், நிலப்பிரபுக்கள், மூன்றாவது பிரிவைச்சேர்ந்த பொதுமக்கள் ஆகிய மூன்று படிநிலைகளின் வழியே கீழிறங்கியது. போர்பன் அரசவம்சத்தைச் சேர்ந்த இளம் வயதுடைய பதினாறாம் லூயி எனும் மன்னரால் பிரான்ஸ் ஆளப்பட்டது. அவர் ஆஸ்திரிய இளவரசியான மேரி அன்டாய்னட் என்பவரை மணம் முடித்திருந்தார். அரசர் முழுமையான அதிகாரத்தைப் பெற்றிருந்தார். அவர் ஆடம்பரமான வாழ்க்கைமுறையை மேற்கொண்டார். ஏழை மக்களின் மீது வரி விதித்த அரசு, பணம்படைத்தோர் மீது வரி விதிக்கவில்லை.

விளைச்சல் பொய்த்துப் போனதால் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு பட்டினியால் அவதியுற்று மன அமைதி இழந்து, தங்கள் அரசர் மீதும்




12th_History_TM_Unit_11_V2.indd 176 2/4/2020 10:56:58 AM

அரசாங்கத்தின் மீதும் எரிச்சல்கொண்ட பாரிஸ் நகரக் கும்பல் 1789 ஜூலை 14இல் பாஸ்டில் கோட்டையைத் (சிறைச்சாலை) தகர்த்தது. பாஸ்டில் சிறை தகர்ப்பானது உலக வரலாற்றில் ஒரு புதிய காலம் தொடங்கிவிட்டதைச் சுட்டிக் காட்டியது. இப்புரட்சி வெடிப்பதற்கு பல காரணங்கள் இருந்தன.



பாஸ்டில் சிறை தகர்ப்பு

### விவசாயிகளின் நிலை

பிரெஞ்சு சமூகத்தில் பெரும்பகுதியாக இருந்தவர்கள் விவசாயிகளே ஆவர். அவர்கள் கொத்தடிமைகளாக இருந்தனர். வாரத்தில் சில நாட்கள் ஊதியம் ஏதுமின்றி தங்கள் பிரபுக்களுக்காக அவர்கள் வேலைசெய்ய வேண்டியிருந்தது. பிரபுவின் அனுமதியில்லாமல் அவர்களால் திருமணம் செய்யவோ நிலங்களை விற்கவோ முடியாது. இவைகளுக்கும் மேலாக ரொட்டி தயாரிப்பதற்கு தனது அடுமனையைப் பயன்படுத்திய விவசாயிகளிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமையையும், விவசாயிகளுக்குச் சொந்தமான ஆடு, மாடுகளின் மேல் வரி விதிக்கும் உரிமையையும் பிரபுக்கள் பெற்றிருந்தனர். ஒரு விவசாயி தன்னுடைய வருமானத்தில் 80 விழுக்காட்டை பலவிதமான வரி வசூலிப்பாளர்களிடம் வரியாகச் செலுத்தினார் என மதிப்பிடப்பட்டது. அவர்களில் "மூன்றில் ஒரு பகுதியினர் ஆண்டின் மூன்றில் ஒரு பகுதி நாட்களில் மூன்றாம் தர உருளைக் கிழங்கு தவிர உண்பதற்கு வேறெதுவுமின்றி இருந்தனர்" – என கார்லைல் எழுதியுள்ளார்.

### மூன்று பிரிவுகள்

பிரெஞ்சு சமூகம் மூன்று முக்கியப் பிரிவுகளைக் (எஸ்டேட்டுகள்) கொண்டிருந்தது. அவை முறையே மதகுருமார்கள், நிலப்பிரபுக்கள் (நிலங்களைக் கொண்ட உயர் குடிகள்), உரிமைகளற்ற சாதாரண மக்கள் ஆகியனவாகும். மதகுருமார்களும், பிரபுக்களும் சிறப்புரிமைகளை அனுபவித்தனர். அரசரால் விதிக்கப்பட்ட பல வரிகளிலிருந்து அவர்கள் விலக்களிக்கப்பட்டிருந்தனர். சிறப்பு உரிமைகளின் காரணமாய் முதலிரண்டு பிரிவைச் சார்ந்தவர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருந்ததால், மூன்றாம் பிரிவைச் சேர்ந்தவர்களே வரிவிதிப்பின் கொடுமைகளை எதிர்கொள்ள நேர்ந்தது. திருச்சபையால் வசூலிக்கப்பட்ட டைத் எனும் வரி, டெய்ல் எனும் பெயரில் செலுத்தப்பட்ட நிலவரி, காபெல் எனும் உப்பின் மீதான வரி, புகையிலையின் மீதான வரி, ஆகியவை முக்கியமான வரிகளாகும்.

நிலமானியமுறை சட்டங்களை விவசாயிகளால் தாங்களாக மட்டுமேயிருந்து எதிர்க்க இயலவில்லை. எனவே அவர்கள் வெளியே இருந்து உதவியும், தலைமையும் வரவேண்டுமென எதிர்பார்த்தனர். எழுச்சிபெற்றுக் கொண்டிருந்த பூர்ஷ்வாக்கள் (நடுத்தர வர்க்கத்தினரின் தொகுப்பு) தங்கள் பொருளாதார உயர்நிலைக்கு இணையான அரசியல் அதிகாரத்தைப் பெற விரும்பினர். இப்பூர்ஷ்வாக்களே தலைமையேற்று பிரெஞ்சுப் புரட்சி நடைபெற கருவியாய்ச் செயல்பட்டனர்.

> பூர்ஷ்வா வகுப்பு கல்வியறிவு பெற்ற இடைத்தட்டு மக்களைக் கொண்டிருந்தது. எழுத்தாளர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள் வழக்கறிஞர்கள், நீதிபதிகள், குடிமைப் பணியாளர்கள் ஆகியோர் இவ்வகுப்பை உருவாக்கினர்.

### நிதி நிர்வாகச் சீர்கேடு

அண்டை நாடான ஆங்கிலப் பேரரசுடன் பிரான்ஸ் தொடர்ந்து போர் மேற்கொண்டதால் கருவூலத்திற்குப் பெருஞ்செலவை ஏற்படுத்தியது. இங்கிலாந்துடனும் பிரஷ்யாவுடனும் மேற்கொள்ளப்பட்ட ஏழாண்டுப் போரில் பிரான்ஸ் பெருந்தொகையைச் செலவழித்தது. அதைக் காட்டிலும் அதிகமான தொகையை அமெரிக்கா இங்கிலாந்துடனான போரில் செலவு செய்தது. பிரான்ஸ் தனது சக்திக்கு மீறிய மிகப்பெரும் உதவிகளை அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்குச் செய்தது. வட்டிக்குக் கடன் கொடுப்போரிடமிருந்து அரசு பெற்ற கடன்தொகை அதிகமானதால், பெற்ற கடன்களுக்கு அரசு அதிகமாக வட்டி செலுத்த வேண்டியதாயிற்று. கடன்களை அடைப்பதற்காக அரசு சாதாரண மக்களின் மீது அதிக வரிகளைச் சுமத்தியது. வரி செலுத்துவதிலிருந்து தங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த வரிவிலக்கை, பிரபுக்களும் மதகுருமார்களும் தாங்களாகவே முன்வந்து விட்டுக் கொடுத்து அரசைக் காக்கத் தயங்கினர். அரச சபையின் ஊதாரித்தனமும், பதினாறாம் லூயி மன்னரின் திறமையின்மையும் நிலைமைகளை மேலும் சிக்கலாக்கின.



12th_History_TM_Unit_11_V2.indd 177 2/4/2020 10:56:59 AM

### அறிவார்ந்த மக்களின் பங்கு

1789 புரட்சிக்கு மிக முன்னதாகவே கருத்துக் களத்தில் புரட்சி நடைபெற்று விட்டது. அறிவொளிச் சிந்தனைகளால் எழுச்சியூட்டப்பட்டிருந்த அறிவார்ந்த மக்கள் (பிரெஞ்சு மொழியில் philosophes என்றழைக்கப்பட்டனர்) அனைத்து அறிவுத்துறைகளையும் காரணகாரியங்களோடு பார்க்கத் துவங்கினர். பிரெஞ்சுப் புரட்சி வெடிப்பதற்காக சமூகத்தை தயார் செய்ததில் அவர்கள் முக்கியப் பங்கு வகித்தனர். வால்டேர், ரூசோ ஆகியோரின் எழுத்துக்கள் புரட்சிக்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தன. 'சட்டங்களின் சாரம்' (The Spirit of Laws) எனும் தனது நூலில் மாண்டெஸ்கியூ (1689–1755) அதிகாரங்கள் அனைத்தும் ஓரிடத்தில் குவிக்கப்படுவதை எதிர்த்தார். அதிகாரங்கள் சட்டமியற்றுதல், சட்டங்களை செயல்படுத்துதல், நீதித்துறை என பிரிக்கப்பட வேண்டுமெனக் கூறினார். வால்டேர் (1694–1778) "பதினான்காம் லூயியின் காலம்" (The Age of Louis XIV) என்ற தனது நூலில் பிரெஞ்சுக்காரர்களின் மதம்சார்ந்த மூட நம்பிக்கைகளை எதிர்த்ததோடு முடியாட்சி மன்னர்களின் கீழ் நடைபெற்ற பிரெஞ்சு நிர்வாகத்தையும் விமர்சித்தார். ரூஸோ (1712–1778) தான் எழுதிய 'சமூக ஒப்பந்தம்' (Social Contract) எனும் நூலில், ஆள்வோர்க்கும் ஆளப்படுவோருக்குமான உறவு ஓர் ஒப்பந்தத்தால் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென வாதிட்டார். ஆள்பவர் நியாயமான முறையில் ஆட்சி செய்தால் அவர் மக்களால் மதிக்கப்படுவார் என்றும் ஆள்பவர் ஒப்பந்தத்திற்கு மாறாக நேர்மையற்ற முறையில் ஆட்சிபுரிந்தால் அவர் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். ஆங்கிலத் தத்துவ ஞானியான ஜான் லாக் "அரசாங்கத்தின் இரு ஆய்வுக் கட்டுரைகள்" (Two Treatises of Government) எனும் நூலில் தெய்வீக உரிமைக் கோட்பாட்டையும் வரம்பற்ற முடியாட்சியையும் எதிர்த்தார். தீதரோ என்பவரும் மற்றவர்களும் வெளியிட்ட கலைக்களஞ்சியத்தில் (Encyclopedia) இது போன்ற கருத்துக்களும் இடம் பெற்றிருந்தன.

ரூஸோ எழுதிய சமூக ஒப்பந்தம் எனும் நூல், "மனிதன் பிறக்கும் போது சுதந்திரமானவனாகப் பிறக்கிறான். ஆனால் அனைத்து இடங்களிலும் சங்கிலிகளில் பிணைக்கப்பட்டுள்ளான்" எனும் புகழ்பெற்ற தொடக்க வரிகளைக் கொண்டுள்ளது. இவ்வரிகளுக்காகவே அவர் போற்றப்படுகிறார்.



ரூசோ வால்டேர் மாண்டெஸ்கியூ

### பிரெஞ்சுப் புரட்சி

#### தொடக்கம்

1789 மே மாதத்தில் பிரெஞ்சு பாராளுமன்றம் (முப்பேராயம் / Estate General) கூட்டப்பட்டதிலிருந்து பிரெஞ்சுப் புரட்சி தொடங்கியது. அரசாங்கம் எதிர்கொண்ட நிதிப் பிரச்சனைகளால் முப்பேராயத்தைக் கூட்டுவது அவசியமாயிற்று. முப்பேராயத்தின் கூட்டம் வெர்செய்ல்ஸ் மாளிகையில் நடைபெற்றது. முதலிரண்டு சமூகப் பிரிவுகளான மதகுருமார்கள், நிலப்பிரபுக்கள் ஆகிய பிரிவுகள் ஒவ்வொன்றும் 300 பிரதிநிதிகளை அனுப்பி வைத்தது. மூன்றாவது பிரிவு பெரும்பாலும் வணிகர்களையும் கல்வி கற்றவர்களையும் உள்ளடக்கிய 600 பிரதிநிதிகளை அனுப்பி வைத்தது. இவர்கள் முதலிரண்டு பிரிவுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளின் பின்புறம் நிற்க வைக்கப்பட்டனர். இம்முப்பேராயக் கூட்டத்தில் எவ்வாறு பிரதிநிதிகள் வாக்களிப்பது எனும் கேள்வியெழுந்தது. ஒவ்வொரு பிரிவினருக்கும் ஒரு வாக்கு எனும் மரபு சார்ந்த முறை அப்படியே தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டுமென பதினாறாம் லூயி விரும்பினார். ஆனால் சமூகத்தின் மூன்றாம் பிரிவைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்கு எனும் கோரிக்கையை முன் வைத்தனர்.

### டென்னிஸ் மைதான உறுதிமொழி



மிராபு



அபே சீயஸ்

சமூகத்தின் மூன்றாம் பிரிவைச் சேர்ந்த பிரதிநிதிகளின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதால் அவர்கள் 1789 ஜூன் 17இல் தேசிய சட்டமன்றத்தைக் கூட்டினர். பின்னர் அவர்கள் முப்பேராயத்தை விட்டு வெளியேறி 1789 ஜூன் 20இல் டென்னிஸ் மைதானத்தில் ஒன்று கூடினர்.



12th_History_TM_Unit_11_V2.indd 178 2/4/2020 10:56:59 AM

அரசரின் அதிகாரங்கள் குறைக்கப்படவேண்டும், புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படவேண்டும். அதுவரை கலைந்து செல்லப் போவதில்லை என உறுதிமொழி எடுத்தனர். "இதுவே டென்னிஸ் மைதான உறுதிமொழி" ஆகும். இவ்வெதிர்ப்பில் அவர்களுக்கு மிராபு எனும் பிரபுவும் அபே சீயஸ் எனும் மதகுருவும் தலைமை தாங்கினர்.



டென்னிஸ் மைதான உறுதிமொழி

### பாஸ்டில் தகர்ப்பு

மூன்றாம் பிரிவுப் பிரதிநிதிகள் தேசிய சட்டமன்றத்தை அமைக்கும் பணியில் முழு வீச்சில் ஈடுபட்டிருந்தபோது, சாதாரண மக்கள் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், பணம் படைத்த வணிகர்களின் தானியப் பதுக்கல் ஆகியவற்றால் துயரங்களுக்கு உள்ளாயினர். உணர்ச்சிவயப்பட்ட பெண்கள் சந்தைப் பகுதியை முற்றுகையிட்டு கிளர்ச்சி செய்தனர். அமைதியின்மையைக் கண்ணுற்ற அரசர் பாரிஸ் நகர வீதிகளுக்கு செல்லும்படி படைகளுக்குக் கட்டளையிட்டார். இதனால் கோபம் கொண்டு, வெகுண்டெழுந்த மக்கள் பாரிஸ் நகரின் முக்கியச் சிறைக்கூடமான பாஸ்டில் சிறையை 1789 ஜூலை 14இல் தகர்த்து கைதிகளை விடுவித்தனர்.

பிரான்சில் இப்போதும் ஜூலை 14 பாஸ்டில் நாளாக அல்லது பிரெஞ்சு தேசிய தினமாகக் கொண்டாடப்படுகிறது.

### தேசிய சட்டமன்றம்

பாஸ்டில் சிறை தகர்ப்பால் ஊக்கம் பெற்ற தேசிய சட்டமன்றம், நிலமானிய முறையை ஒழித்தது. நிகழ்வுகளின் திசை திருப்பத்தால் அதிர்ந்துபோன அரசர் தேசிய சட்டமன்றம் தோற்றுவிக்கப்பட்டதை ஏற்றுக் கொண்டார். திருச்சபை தனது உரிமைகளைக் கைவிடும்படியும் டைத் வரியை நீக்கும் படியும் அறிவுறுத்தப்பட்டது. 1791இல் தேசிய சட்டமன்றம் அரசியலமைப்பை உருவாக்கியது. அதன்படி அரசரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. புதிய அரசியலமைப்பு மூன்று வெவ்வேறு அங்கங்களைப் பரிந்துரைத்தது. அவை சட்டமியற்றல், சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், நீதித்துறை ஆகியனவாகும். மேலும் தேசிய சட்டமன்றத்தின் உறுப்பினர்கள் தேர்வாளர்கள் எனப்படும் குழுவினரால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுவர் என்றும், இத்தேர்வாளர்கள் 25 வயது நிரம்பப்பெற்ற, வரி செலுத்துகின்ற ஆண் வாக்காளர்களால் வாக்களிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுவர் என்றும் புதிய அரசியல் அமைப்பு கூறியது. இதனால் குடிமக்களில் பெரும்பாலோர் வாக்களிக்கும் உரிமையைப் பெறவில்லை.

### அரசியலமைப்பு உருவாக்கம்

அரசியலமைப்பானது, தேசிய அரசியலமைப்பு நிர்ணய சபையால் உருவாக்கப்பட்டது. 1789 ஆகஸ்டு 26இல் மனிதன் மற்றும் குடிமகனின் உரிமைப் பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரசரைச் சட்டத்தின் ஆட்சிக்குத் துணையாய் இருக்கச் செய்த இப்பிரகடனம் தனிமனித உரிமைகளையும் கூட்டு உரிமைகளையும் வரையறை செய்தது. சட்டம் ஏற்றுக்கொள்ளும் வழக்குகள் தவிர்த்து (உறுப்பு எண் 7) ஏனைய வழக்குகளைக் காரணம் காட்டி எந்தவொரு மனிதரையும் குற்றம் சாட்டவோ, கைது செய்யவோ, சிறையிலடைக்கவோ கூடாதென இது

மனித, குடிமக்கள் உரிமைப் பிரகடனம், ஒரு முகவுரையையும் 17 பிரிவுகளையும் கொண்டுள்ளது. முதல் பிரிவு "மனிதர்கள் பிறக்கும் போது சுதந்திரத்துடனும் உரிமைகளில் சமமானவர்களாகவும் உள்ளனர்" என்ற வாசகத்தைக் கொண்டுள்ளது. சுதந்திரம், சொத்துக்களுக்கான பாதுகாப்பு, அடக்குமுறைக்கு எதிர்ப்பு என விவரிக்கப்பட்டுள்ள உரிமைகளைப் பாதுகாப்பதே "அரசியல் ரீதியாக ஒன்றுபடுவதின்" நோக்கமாக இருக்க வேண்டும் என இப்பிரகடனம் குறிப்பிடுகிறது. மேலும் இறையாண்மையும் சட்டமும் "பொது விருப்பம்" என்பதிலிருந்து உருவாக வேண்டுமெனவும் அறிவிக்கிறது. பேச்சு சுதந்திரத்தையும் மத சுதந்திரத்தையும் பாதுகாத்து அது சட்டத்தின் முன் அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டுமென வற்புறுத்துகிறது. அனைத்து மக்களும் தங்கள் வருவாய் ஆதாரங்களுக்கு ஏற்றவாறு வரி செலுத்த வேண்டுமென உறுதிபடக் கூறுகிறது. 1791இல் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பிற்கு இப்பிரகடனம் ஒரு முகவுரையாக அமைந்தது.


12th_History_TM_Unit_11_V2.indd 179 2/4/2020 10:56:59 AM

கூறியது. மேலும் பொது மக்களின் ஒப்புதலின்றி வரிகளை உயர்த்தக் கூடாதெனவும் குறிப்பிட்டது (உறுப்பு எண் 14) "அனைத்து மனிதர்களும் பிறப்பில் சுதந்திரமாகவும் உரிமைகளில் சமமாகவும் உள்ளனர்" என பிரகடனம் செய்யும் உறுப்பு 1இல் தாமஸ் ஜெபர்சனின் செல்வாக்கை உய்த்துணர முடியும்.

பிரெஞ்சுப் புரட்சியில் பெண்கள் தனிச்சிறப்பு வாய்ந்த பங்கினை வகித்தனர். பாரிஸ் நகரின் ஏழ்மையான பகுதிகளைச் சார்ந்த பெண்கள், 20,000 ஆயுதமேந்திய ஆண்கள் உடன்வர வெர்செய்ல்ஸ் மாளிகைக்கு அணிவகுத்துச் சென்றனர். அரண்மனைக்குள் புகுந்த அவர்கள் அரசரைத் தங்களுடன் பாரிஸ் நகருக்கு வரும்படி கட்டாயப்படுத்தினர். பாரிஸில் அவர் மக்களின் கண்காணிப்பில் வைக்கப்பட்டார். பல பெண்கள் தீவிர அரசியல் செயல்பாட்டாளர்களாகத் திகழ்ந்தனர். மனிதன் மற்றும் குடிமக்களின் உரிமைகள் பிரகடனத்தில் பெண்கள் ஒதுக்கப்பட்டதால் அதன் மீது மனநிறைவு கொள்ளாத ஒலிம்பே – டி கோஜஸ் எனும் பெண்மணி, பெண் சமத்துவத்தை முன் வைத்து பெண்கள் மற்றும் குடிமகன் உரிமைகள் எனும் அறிவிப்பை எழுதினார்.



வெர்செய்ல்ஸ் நோக்கிப் பெண்களின் அணிவகுப்பு

### ஆஸ்திரியாவிற்கும் பிரஷ்யாவிற்கும் எதிராகப் போர்

ஒருபுறம் அரசியல் அமைப்புக்கு கட்டுப்பட்ட முடியாட்சிக்கு ஒத்துக்கொண்ட அரசர் மறுபுறம் ரகசியமாக ஆஸ்திரியா, பிரஷ்யா ஆகிய நாடுகளிடம் உதவிவேண்டினார். பிரான்சில் நடைபெறும் நிகழ்வுகளை அண்டை நாட்டு அரசுகள் கவலையுடன் கவனித்து வந்தன. பொது மக்களின் எழுச்சி முடியாட்சி முறைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும் என அஞ்சிய அந்நாடுகள் புரட்சியைக் கட்டுப்படுத்த பிரெஞ்சு அரசுக்கு உதவியாகப் படைகளை அனுப்பி வைத்தன. இதே சமயத்தில் தேசிய சட்டமன்றம் ஆஸ்திரியா, பிரஷ்யா ஆகியவற்றுக்கு எதிராகப் போர் அறிவிப்பு செய்தது. இதைக் கேள்விப்பட்டவுடன் பிரான்சின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அந்நியப்படைகளை எதிர்கொள்ள ஒருங்கிணைந்தனர். மார்செய்ல்ஸ் எனும் இடத்திலிருந்து ஒரு மக்கள் கூட்டம் மார்செய்லைஸ் எனும் பாடலைப் பாடிக் கொண்டே பாரிஸ் நோக்கிப் புறப்பட்டது.

மார்செய்ல்ஸ் எனும் இடத்திலிருந்து பிரெஞ்சுப் படைகளுக்கான ஒரு பாடலை (1792) ரூஜெட் டி லிஸ்லே என்பார் இயற்றினார். அது லா மார்செய்லைஸ் என அறியப்பட்டது. 1795 ஜூலை 14இல் இயற்றப்பட்ட சட்டத்தின்படி இப்பாடல் பிரான்சின் தேசியகீதமாக அறிவிக்கப்பட்டது.

### குழுக்களின் தோற்றம்

தேசிய சட்டமன்றம் உருவாக்கப்பட்ட பின்னரும் கூட, சாதாரண மக்களின் துன்பங்கள் தொடர்கதையாகவே இருந்தன. அதிக எண்ணிக்கையிலான சாதாரண மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்படாததால், பெரும்பான்மையான மக்கள் சட்டமன்றத்தை பணம் படைத்தவர்களின் இடமாகவே பார்த்தனர். பாரிஸ் நகரின் புதிய ஆயுத அதிகாரமானது இடைத்தட்டு மக்களிடையே இருந்து திரட்டப்பட்ட தேசிய பாதுகாவலர்கள் எனும் படையின் கைவசமிருந்தது. அமெரிக்க சுதந்திரப் போரில் பிரெஞ்சு அரசாங்கத்தின் அதிகாரபூர்வ ஆலோசகராகச் செயல்பட்ட லஃபாயட் என்பவரே இதன் தலைவராவார். அரசர், முந்நாள் உயர்குடியினர், இடைத்தட்டு மக்கள், பாரிஸ் நகர மக்கள் கூட்டம் ஆகிய அனைவரும் இணைந்து பாஸ்டில் வீழ்ச்சியின் முதலாமாண்டு நினைவு விழாவைக் கொண்டாடிய போது ஒரு பொதுவான விடுதலைபெற்ற உணர்வும் மகிழ்ச்சியும் நிலவியது. ஆனால் இவ்வொற்றுமை நீண்ட காலம் நீடிக்கவில்லை. மனநிறைவு பெறாத மக்கள் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து விவாதம் செய்ய அரசியல் குழுக்களை உருவாக்கத் தொடங்கினர். அவ்வாறு உருவாகி பாரிஸ் நகரில் புகழ்பெற்று விளங்கிய குழு ஜேக்கோபியன் குழு (Club) என்பதாகும். சமூகத்தில் ஏழ்மை நிலையில் இருந்தவர்கள், சிறு வியாபாரிகள், கைவினைஞர்கள், பணியாளர்கள், கூலி வேலை செய்யும் தொழிலாளர் ஆகியோர் இதில் உறுப்பினர்களாய் இருந்தனர். அவர்களின் தலைவர் மாக்ஸ்மிலியன் ரோபஸ்பியர் ஆவார். பிரபுக்கள் வகுப்பைச் சேர்ந்தோர் வழக்கமாக அணியக்கூடிய முட்டுக் கால்களின் கீழ் இழுத்துக் கட்டக் கூடிய காற்சட்டைகளுக்குப் பதிலாக ஜேக்கோபியர்கள் நீளமான கோடுகளைக் கொண்ட காற்சட்டைகளை அணிந்தனர். தங்களை வேறுபடுத்திக் காட்டிக்



12th_History_TM_Unit_11_V2.indd 180 2/4/2020 10:56:59 AM

கொள்வதற்காக "முட்டுக்குக்கு கீழ் காற்சட்டையைக் கட்டிக் கொள்ளாதவர்கள்" என தங்களைத் தாங்களே அழைத்துக் கொண்டனர். டாண்டன் எனும் வழக்கறிஞர் கார்டிலியர் கிளப்பில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தார்.



லஃபாயட்     ரோபஸ்பியர்     டாண்டன்

### கிரோண்டியர்களும் ஜேக்கோபியர்களும்

லஃபாயட்டியின் அரசியல் அமைப்புக்குக் கட்டுப்பட்ட முடியாட்சி இரண்டு ஆண்டு காலம் பிரெஞ்சு அரசியல் களத்தில் கோலோச்சியது. 1791 ஜூனில் பாரிசிலிருந்து தப்பித்து, எல்லையைக் கடந்து அங்கே கூடியிருக்கும் எதிர்புரட்சிப் படைகளுடன் இணைவதற்காக மன்னர் மேற்கொண்ட முயற்சியைக் குடியானவர் படையொன்று முறியடித்தது. இருந்தபோதிலும் உணவுப் பண்டங்களுக்கான பற்றாக்குறையும் விலையேற்றமும் வேலையில்லாத் திண்டாட்டமும் கைவினைஞர்களையும் சிறு வணிகர்களையும் தொழிலாளர்களையும் நம்பிக்கை இழக்கச் செய்தது ஏமாற்றத்தின் எல்லைக்கு இட்டுச் சென்றது. மக்கள் பொங்கியெழுவதை அடக்குமுறையால் கட்டுப்படுத்த இயலவில்லை. அரசாங்கத்தை நடத்திய மிதவாதிகள் தங்களுக்குள்ளேயே வேறுபட்டனர். ஜோக்கோபியன் குழுவிற்குள் இருந்த கிரோண்டியர்கள் (அவர்களின் ஒரு தலைவர் பிரிசாட் என்ற பெயரால் பிரிசாடினியர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்) ரோபஸ்பியரைப் போலவோ, டாண்டனைப் போலவோ அதி தீவிரவாதிகளாக இல்லை. அவர்களுக்குள்ளே பல கருத்து வேறுபாடுகளிருந்தாலும் ரோபஸ்பியரைத் தவிர மற்றவர்கள், அந்நிய சக்திகளுக்கு எதிரான ஒரு போர் செய்வதன் மூலம் நிலைமைகளைச் சீராக்கலாம் என நம்பினர். அவ்வாறான போர் புரட்சிக்கான கதவுகளைத் திறந்து வைக்குமென ரோபஸ்பியர் வாதாடினார். ஆனால் கிரோண்டியர்கள் அரசருடன் இசைந்து ஒரு அரசாங்கத்தை உருவாக்கியதையோ, பின்னர் 1792 ஏப்ரலில் ஆஸ்திரியாவுக்கும் பிரஷ்யாவுக்கும் எதிராகப் போர் அறிவிப்புச் செய்ததையோ அவரால் தடுக்க இயலவில்லை.

### தேசியப் பேரவை (National Convention)

கிரோண்டியர்கள் திட்டம் பேரிடராக முடிந்தது. கோபம் கொண்ட ஜேக்கோபியன் குழு உறுப்பினர்கள் பதினாறாம் லூயியின் அதிகாரபூர்வமான வசிப்பிடமான டியூலரிஸ் அரண்மனைக்குள் புகுந்தனர். காவலர்களைக் கொன்று அரசரைச் சிறைப்பிடித்தனர். புதிதாக உருவான சட்டமன்றமான தேசியப் பேரவை அரசரைச் சிறையில் அடைக்கவும் நாட்டிற்குப் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கத் தேர்தல் நடத்தவும் வாக்களித்தது. தேர்தலில் 21 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் செல்வத்திலும், அந்தஸ்திலும் எந்த வேறுபாடும் இல்லாமல் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றனர்.

### செப்டம்பர் படுகொலைகள்

முடியாட்சி தூக்கி எறியப்பட்ட பின்னர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் எதிர்புரட்சியாளர்கள் தீட்டிய சதியொன்றில் இணையப் போவதாக மக்கள் நம்பினர். இதன் விளைவாக மக்கள் கூட்டம் சிறைச்சாலைகளைத் தாக்கின. அரச குடும்ப ஆதரவாளர்கள் எனக் கருதப்பட்ட அனைவரும் கேள்வி முறையின்றி கொல்லப்பட்டனர். 1792 செப்டம்பர் 2இல் பாரிஸ் நகரில் அபே சிறையில் தொடங்கிய இப்படுகொலை நகரின் ஏனைய சிறைகளிலும் மேற்கொள்ளப்பட்டு அடுத்து வந்த நான்கு நாட்களுக்கும் தொடர்ந்தது. செப்டம்பர் படுகொலைகள் எனப் பின்னர் அழைக்கப்பட்ட இந்நிகழ்வில் மொத்தம் 1,200 கைதிகள் கொல்லப்பட்டனர். புரட்சியின் பயங்கரத்திற்கு ஆதாரமாக இப்படுகொலைகள் பற்றிய செய்திகள் ஏனைய நாடுகளில் பரவின. இதற்கு கிரோண்டியர்கள் தங்களின் அதிதீவிர எதிரிகளைக் குறிப்பாக மாரட், டாண்டன், ரோபஸ்பியர் ஆகியோரைக் குற்றம் சாட்டினர்.

### தேசியப் பேரவையின் பணிகள்

1792 செப்டம்பர் 20இல் புரட்சிப் படையினர் ஊடுருவி வந்த பகைவர்களை வால்மி எனுமிடத்தில் எதிர்கொண்டு நிறுத்தினர். மறுநாள் புதிய சட்டமன்றமான தேசியப்பேரவை முடியாட்சியை ஒழித்து பிரான்ஸ் ஒரு குடியரசு என அறிவித்தது.

1793 ஜனவரி 21இல் அரசர் பதினாறாம் லூயி மக்கள் தீர்ப்பாயத்தின் முன்னர் கொண்டுவரப்பட்டு கில்லட்டின் கொலைக்கருவியில் கொல்லப்பட்டார். தனது மக்களுக்கு எதிராக அயல்நாட்டவரின் உதவியைக் கோரியதே அவர் செய்த குற்றமாகும். இதன் பின்னர் விரைவில் மேரி அன்டாய்னெட்டும் சிரச்சேதம் செய்யப்பட்டார்.



12th_History_TM_Unit_11_V2.indd 181 2/4/2020 10:57:00 AM



பதினாறாம் லூயிக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படல்

இச்சூழ்நிலையில் நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் ஒரு சேரப் பசித்துயரம் பெருகியது. விலைகளைக் கட்டுப்படுத்தும்படியும், மக்களுக்கு உணவு தானிய விநியோகங்களை முறைப்படுத்தும்படியும் ஊகவணிகர்களுக்கும் பதுக்கல்காரர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கும்படியும் பாரிஸ் நகர மக்கள் கோரிக்கை வைத்தனர். பாரிஸ் நகர மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை முன்னெடுக்காத தேசியப் பேரவை, மாறாக இராணுவத்தை ஏவி மக்களைத் தாக்கியது. படைத்தளபதிகளில் பலர் எதிரணியில் சேர்ந்து கொண்டதால் படைகள் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்தன. மேற்கு பிரான்சின் வெண்டி பகுதியில் நம்பிக்கை இழந்த விவசாயிகள் முடியாட்சி ஆதரவாளர்களுடன் கைகோர்த்தனர். முடிவாக (1793 மே 29) மிதவாதிகளும் முடியரசு ஆதரவாளர்களும் லியான்ஸ் (Lyons) பகுதியைக் கைப்பற்றினர். இப்பகுதி பட்டு ஆலைத் தொழில் நன்கு செயல்பட்ட பகுதியாகும். மேலும் இப்பகுதியில் ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளிலிருந்து பணம் படைத்த வணிகர்கள் பலர் குடியேறியிருந்தனர்.

### ஜேகோபியன்களின் ஆட்சி

புரட்சி தொடங்கியது முதல் கடந்த நான்கு ஆண்டுகளில் ஏற்பட்டிருந்த நன்மைகளை இழப்பதற்கு ரோபஸ்பியர் விரும்பவில்லை. எனவே அவர் தன்னுடைய சர்வாதிகார ஆட்சியைத் தொடங்கினார். ஜேகோபியர்கள், கிரோண்டியர் குழுவின் தலைவர்களை சிரச்சேதம் செய்யும் கில்லட்டின் இயந்திரத்திற்கு அனுப்பி வைத்தனர். டாண்டனும் கில்லட்டினுக்கு அனுப்பப்பட்டார்.

1793க்கும் 1794க்கும் இடைப்பட்ட காலம் தீவிர சீர்திருத்தங்களுக்கான காலமாகும். 1794 பிப்ரவரி 4இல் ஜேக்கோப்பியர்கள் அதிகம் இருந்த சட்டமன்றம் பிரான்சின் அனைத்துப் பகுதிகளிலும் அடிமைமுறையை ஒழித்து ஆணை பிறப்பித்தது. மக்கள் பெரும் ஊதியத்திற்கு உச்சவரம்பு விதிக்கப்பட்டது. ரொட்டி, இறைச்சி போன்ற உணவுப் பண்டங்கள் பங்கிட்டு விநியோகம் (Ration) செய்யப்பட்டன. பண்ணைப் பொருட்களுக்கான விலையை அரசாங்கம் நிர்ணயம் செய்தது. 'சார்', 'மேடம்' எனும் சொற்களுக்குப் பதிலாக ஆண் குடிமகன், பெண் குடிமகள் எனும் வார்த்தைகள் பயன்பாட்டிற்கு வந்தன. திருச்சபைகள் போன்ற சமயம் சார்ந்த இடங்கள் இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டன. அரசாங்கமும், சமூகத்தின் அடித்தளமும் அளவுக்கு மேலாக தீவிரமயமாக்கப்பட்டதால் கோபம் கொண்ட உறுப்பினர்கள் ரோபஸ்பியருக்கு எதிராகவே திரும்பினர். அவரும் குற்றம் சாட்டப்பெற்று 1794இல் தூக்கிலிடப்பட்டார்.

டாக்டர் ஜோசப் – இக்னேஸ் கில்லட்டின் என்பார் ஒரு பிரெஞ்சு மருத்துவராவார். அவர் ஒரு கட்டுரையில் மரண தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகளை விரைவாகக் கொல்லும் இயந்திரம் குறித்து எழுதினார். அதுபோன்ற இயந்திரத்தை அவர் கண்டுபிடிக்காவிட்டாலும் அதற்கு அவர் பெயரே வைக்கப்பட்டது. கண்டுபிடித்தவர் ஆண்டனி லூயி எனக் கூறப்படுகிறது.

### இயக்குநர் குழு

ரோபஸ்பியரை பதவியைவிட்டு தூக்கியவர்களாலும் நீண்ட நாட்கள் அதிகாரத்தில் இருக்க முடியவில்லை. புரட்சியை வெறுத்தவர்கள் பாரிஸ் நகரின் வீதிகளை ஆக்கிரமித்து புரட்சிகர சிந்தனைகளை ஆதரித்தவர்களையெல்லாம் தாக்கினர். 1795 ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் இரண்டு கிளர்ச்சிகள் ஏற்பட்டன. புதிதாக உருவாயிருந்த தெர்மிடோரியன் எனும் குழுவுக்கு விசுவாசமாயிருந்த படைகளால் அவைகள் நசுக்கப்பட்டன. இதனிடையே எமிகிரஸ்கள் (Emigres) நாடு திரும்பத் தொடங்கினர். அவர்கள் விரைவில் முடியாட்சி மீட்கப்படுமென தற்பெருமை பேசினர்.

**எமிகிரஸ் (Emigres):** அரசியல் காரணங்களுக்காக தங்கள் சொந்த நாட்டிலிருந்து வெளியேறி மற்றொரு நாட்டில் குடியேறுவோரை எமிகிரஸ் என்பர். பிரான்சின் அன்றைய சூழலில் புரட்சியைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் நாட்டை விட்டு ஓடிய பிரபுக்களை எமிகிரஸ் என அழைத்தனர்.



12th_History_TM_Unit_11_V2.indd 182 2/4/2020 10:57:00 AM

1795 அக்டோபரில் முடியாட்சி ஆதரவாளர்கள் பாரிஸ் நகர வீதிகளில் தாங்களாகவே ஒரு கிளர்ச்சியை அரங்கேற்றினர். ஒரு காலத்தில் ஜேகோபியராக இருந்தவரும், ராணுவத்தில் முன்னேறிக் கொண்டிருக்கும் அதிகாரியுமான நெப்போலியன் போனபர்ட் படைகளுக்குத் தலைமையேற்று கிளர்ச்சியாளர்களுக்கு உதவி செய்யக் களமிறங்கினார். ரத்தம் சிந்துவதற்கு அஞ்சிய தெர்மிடோரியன்கள் ஐந்து நபர்களைக் கொண்ட இயக்குநர் குழுவிடம் அதிகாரத்தை ஒப்படைக்க இசைந்தனர். நான்கு வருட காலத்தில் ஏதாவது ஒன்றை சாக்காகக் கொண்டு நெப்போலியன் அதிகாரம் மிக்கவரானார். 1799இல் நெப்போலியன் ராணுவப் புரட்சியை அரங்கேற்ற அது அவருக்கு அனைத்து அதிகாரங்களையும் நல்கியது. 1804இல் நெப்போலியன் தன்னைப் பிரான்சின் பேரரசராகப் போப்பாண்டவரைக் கொண்டு முடிசூட்டச் செய்தார்.

புரட்சியாளர்கள் தோற்கடிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் புரட்சியினுடைய பாரம்பரியத்தின் பெரும் பகுதி நவீன உலகை வடிவமைக்க தொடர்ந்து வாழ்ந்தது.

### பிரெஞ்சுப் புரட்சியின் தாக்கம்

- பிரெஞ்சுப் புரட்சி பிரான்சில் மட்டுமல்லாது ஐரோப்பாவின் அனைத்துப் பகுதிகளிலும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. பத்தொன்பதாம் நூற்றாண்டையும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியையும் சேர்ந்த காலனிய எதிர்ப்பு, அறிவார்ந்த மக்களின் இயக்கங்களுக்கும் கூட ஊக்கமளித்தது.
- பிரெஞ்சுப் புரட்சி பிரான்சில் பதினாறாம் லூயியின் ஆட்சியை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது.
- சமூக சமத்துவமின்மையைக் குறைத்தது. பிறப்பின் அடிப்படையில் சமூகத்தின் சில பிரிவினருக்கு வழங்கப்பட்டிருந்த உரிமைகள் பறிக்கப்பட்டன.
- இப்புரட்சி தேர்தல் உரிமைகளுடன் குடியரசு தன்மையிலான அரசு முறையை அறிமுகம் செய்தது.
- நிலமானிய முறை ஒழிக்கப்பட்டது.
- அடிமை முறை முற்றிலுமாக ஒழிக்கப்படுவதற்கு சில ஆண்டுகள் ஆனாலும் பிரெஞ்சுப் புரட்சி அடிமை முறையை ஒழித்தது.
- திருச்சபை தனது உயர்நிலையை இழந்தது. அது அரசுக்குக் கீழ் எனும் நிலையை அடைந்தது. மதச் சுதந்திரம், மத சகிப்புத்தன்மையும் நிலை பெற்றன.
- மனிதன் மற்றும் குடிமக்கள் உரிமைப் பிரகடனம் தனிப்பட்ட, கூட்டு உரிமைகள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தது.
- அரசின் மூன்று உறுப்புகளான சட்டமியற்றல், நடைமுறைப்படுத்தல், நீதித்துறை ஆகியன முக்கியத்துவம் பெற்றன. ஒன்றையொன்று கண்காணித்துச் சமநிலைப்படுத்திக் கொண்டன. இந்த ஏற்பாடு ஒரு குறிப்பிட்ட மையத்தில் அதிகாரங்கள் குவிக்கப்படுவதைத் தடை செய்தது.
- ஐரோப்பா முழுவதிலும், கொடுங்கோல் ஆட்சியை ஒழித்து சமத்துவ சமூகத்தை நிறுவ முடியும் எனும் நம்பிக்கையைப் பிரெஞ்சுப் புரட்சி மக்களுக்கு வழங்கியது.

## 11.3 இலத்தீன் அமெரிக்காவில் புரட்சிகள்

பதினாறாம் நூற்றாண்டில் இலத்தீன் அமெரிக்க பகுதிகள் ஸ்பானியர்களால் கைப்பற்றப்பட்டன. மேலும் போர்த்துகீசியரும் பிரெஞ்சுக்காரர்களும் அங்கு சென்றனர். இன்கா, அஸ்டெக்குகள் போன்ற தென்அமெரிக்க பண்பாடுகளின் அரசியல் அதிகாரம் இக்காலனியாதிக்கச் சக்திகளால் சிதிலமாக்கப்பட்டன. அங்கிருந்த மத நம்பிக்கைகளை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்த காலனியாதிக்கச் சக்திகள் அப்பகுதிகளில் கத்தோலிக்க மதத்தை அறிமுகம் செய்தன. இலத்தீன் அமெரிக்காவில் காலனியாதிக்கவாதிகளின் ஆட்சியானது கொடூரமானதாக இருந்தது. அது இனப்படுகொலைகள் மற்றும் பூர்வகுடி மக்கள் கணக்கில்லாமல் கொன்று குவிக்கப்படுதல் போன்றவற்றால் அடையாளப்படுத்தப்பட்டது. பூர்வகுடி மக்கள் காலனிய முதலாளிகளின்



குடியேறியவர்களின் அட்டூழியங்கள்

பண்ணைகளிலும் சுரங்கங்களிலும் அடிமைகளைப் போல வேலைகள் செய்யவேண்டியிருந்தது. காலனியாதிக்கவாதிகள் சர்க்கரை, காபி, தங்கம், வெள்ளி ஆகியவற்றை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர்.

இலத்தீன் அமெரிக்கா இன்று மத்திய அமெரிக்காவிலும் தென்அமெரிக்காவிலுமுள்ள மெக்சிகோ, பிரேசில், அர்ஜென்டினா, பெரு, சிலி, வெனிசுலா மற்றும் கரீபியன் நாடுகள் போன்ற பல நாடுகளைக் கொண்டுள்ளது.




## ஹைட்டியர்களின் புரட்சி

முந்நாளில் செயின்ட் – டோமிங்கோ (பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் காலனிகளை அவ்வாறு அழைத்தனர்) என்றறியப்பட்ட ஹைட்டி, கரீபியன் கடலில் இருந்த மிக வளமான பிரெஞ்சுக் காலனியாகும் (1659 – 1804). அது ஐரோப்பாவின், ஏனைய கரீபியன், அமெரிக்கக் காலனிகளின் மொத்த சர்க்கரை உற்பத்தியைக் காட்டிலும் அதிக சர்க்கரையை உற்பத்தி செய்யும் பண்ணைகளைக் கொண்டிருந்தது. இத்தீவின் பூர்வகுடி மக்கள் தங்கத்திற்காகச் சுரங்கங்கள் தோண்ட கட்டாயப்படுத்தப்பட்டனர். ஐரோப்பிய நோய்களாலும் கொடூரமான பணியிடச் சூழலினாலும் இம்மக்கள் பேரழிவுக்குள்ளாயினர். பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் இம்மக்கள் உண்மையிலேயே மறைந்து போனார்கள். மேற்கு ஹிஸ்பானியோலா பகுதியைச் சேர்ந்த நில உரிமையாளர்கள் அதிகமான எண்ணிக்கையில் ஆப்பிரிக்க அடிமைகளை இறக்குமதி செய்தனர். 1789இல் 5,56,000 என மதிப்பிடப்பட்ட செயின்ட் டோமிங்கோவின் மக்கள் தொகை 5,00,000 ஆப்பிரிக்க அடிமைகளையும், 32,000 காலனியவாதிகளையும் (வெள்ளை இன மக்கள்), 24,000 சுதந்திர அஃப்ராஞ்சிகள் (affranchis) அல்லது முலாட்டோக்கள் (ஆப்பிரிக்க ஐரோப்பியரின் வழிவந்த கலப்பினக் கருப்பு நிற மக்கள்) மக்களையும் கொண்டிருந்தது.


வின்சென்ட் ஓஜ்

பாஸ்டில் சிறை வீழ்த்தப்பட்டது எனும் செய்தியைத் தொடர்ந்து முடியாட்சியரின் ஆளுநருக்கு எதிராக ஆயுதமேந்திய எதிர்ப்பு ஒன்று நடைபெற்றது. முலாட்டோபிரிவைச் சேர்ந்த வின்சென்ட் ஓஜ் என்பவர் காலனிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்களுக்காகப் பாரிஸின் நகரச் சட்டமன்றத்தின் ஆதரவைத் திரட்டிக் கொண்டிருந்தார். 1790இன் இறுதியில் அவர் தலைமையில் கிளர்ச்சி நடைபெற்றது. ஆனால் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டு அவர் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார். 1791 மே மாதத்தில் பிரான்சின் புரட்சி அரசாங்கம் வசதி படைத்த முலாட்டோக்களுக்குக் குடியுரிமை வழங்கியது. அவர்கள் சொந்தமாக அடிமைகளைக் கொண்டிருந்தனர். ஆனால் ஹைட்டியின் ஐரோப்பியக் குடிமக்கள் இச்சட்டத்தை மதிக்கவில்லை. இரண்டு மாதங்களுக்குள்ளாக ஐரோப்பிய வெள்ளை இனத்தாருக்கும் முலாட்டோக்களுக்குமிடையே ஆங்காங்கே மோதல்கள் வெடித்தன. கருப்பின அடிமைகளைப் பொறுத்த மட்டிலும், எந்த மாற்றமும் இல்லாமல் அவர்கள் தொடர்ந்து உழைத்து, துயருற்று மாள்வர் என அனைவரும் கருதினர். ஆனால் அனைவரும் வியப்படையும் வண்ணம், ஆகஸ்டு மாதத்தில் ஆயிரக்கணக்கில் அடிமைகள் கிளர்ச்சியை மேற்கொண்டனர்.

ஐரோப்பிய வெள்ளையினத்தவர் அடிமைகளின் கிளர்ச்சியை அடக்குவதற்காக முலாட்டோக்களுடன் சமாதான முயற்சிகளை மேற்கொண்டனர். இதனிடையே 1792 ஏப்ரலில் பிரெஞ்சு தேசியப் பேரவை அனைத்து முலாட்டோக்களுக்கும் குடியுரிமை வழங்கியது. போட்டியும் பகைமையும் கொண்ட குழுக்களிடையே



12th_History_TM_Unit_11_V2.indd 184 2/4/2020 10:57:00 AM

நாடு நாசமானது. அது சாண்டோ டொமிங்கோவில் இருந்த ஸ்பானிய குடியேற்றவாசிகள் அல்லது ஜமைக்காவிலிருந்த பிரிட்டிஷ் துருப்புக்களின் பிடியில் இருந்தது. 1793இல் அமைதியைப் பராமரிப்பதற்காகப் பிரெஞ்சு அரசாங்கம் லெகர் – ஃபெலிசிட் சோன்டோனாக்ஸ் எனும் ஆணையர் ஒருவரை அனுப்பி வைத்தது. அவர் தன்னுடைய படையில் சேர்ந்த அடிமைகள் அனைவருக்கும் சுதந்திரம் வழங்கினார். விரைவில் அவர் அடிமைமுறையை ஒட்டு மொத்தமாகவே ஒழித்தார். இம்முடிவைப் பின்னர் பிரெஞ்சு அரசாங்கம் அதிகாரபூர்வமாக உறுதி செய்தது.

1790களின் இறுதிப் பகுதியில் முன்னர் அடிமையாக இருந்தவரும், படைத்தளபதியுமான டூசையின்ட் எல்' ஓவர்ச்சர் என்பவர் பல பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார். இவருடைய படைகளின் கட்டுபாட்டின் கீழிருந்த செயின்ட் டோமிங்கோவை மீட்பதற்கு நெப்போலியன் 12,000 படை வீரர்களை கப்பலில் அனுப்பி வைத்தார். இதனைத் தொடர்ந்து நடந்த போர் நீண்ட, இரத்தக்களரியான போராக அமைந்தது. போரின் ஒரு கட்டத்தில் பிரெஞ்சு படைகள் வெற்றி பெற்றுவிடும் நிலை ஏற்பட்டது. தொஸ்செயிண்ட் எதிரியோடு சமாதானம் செய்துகொள்ள வாய்ப்பிருப்பதாகத் தவறாக நம்ப வைக்கப்பட்டார். பின்னர் அவர் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டார். இச்சூழலில் அவரின் முந்நாள் படைத்தளபதி டெசலைன்ஸ் நிலமையைக் கட்டுக்குள் கொண்டுவந்து கருப்பின மக்களின் எதிர்ப்பை ஒழுங்கமைத்தார். நெப்போலியனின் படைகள் அவரால் தோற்கடிக்கப்பட்டன. ஹைட்டி 1804இல் செயின்ட் – டோமிங்கோ கருப்பின மக்களின் சுதந்திர நாடானது.



டூசையின்ட் எல்' ஓவர்ச்சர்

### வெனிசுலா, நியூ கிரனடா (தற்போது கொலம்பியா)

ஹைட்டியர்களின் புரட்சியால் ஊக்கம் பெற்ற வெனிசுலாவின் அடிமை மக்கள் 1790களில் கிளர்ச்சிகளை மேற்கொண்டனர். கிரியோல் (கலப்பின ஐரோப்பியர்கள், கருப்பின மக்களின் வழிவந்தோர்) எனப்பட்ட இன மக்கள் தங்களின் பெருந்தோட்டப் பொருளாதாரத்திற்கு லாபம் நல்கும் சுதந்திர வணிகத்தை மேலும் விரிவாக்கம் செய்ய நினைத்தனர். அதே சமயம் ஸ்பானியர்களின் கட்டுப்பாடு நீக்கப்பட்டுவிட்டால் புரட்சிகள் ஏற்பட்டு தங்களுடைய அதிகாரமும் சிதைக்கப்பட்டுவிடுமோ எனவும் அஞ்சினர். எனவே அவர்கள் நியூ கிரனடாவிலுள்ள ஆளுநருக்கு மிகவும் விசுவாசமிக்க ஒரு பிரிவை உருவாக்கினர்.

இதனிடையே திறமையற்ற ஸ்பெயின் நாட்டு அரசர் நான்காம் சார்லஸ் தனது மகன் பெர்டினான்டுக்குச் சாதகமாக அரியணையைத் துறந்தார். ஆனால் அவர்கள் இருவரையும் சிறையிலடைத்த நெப்போலியன் தனது சகோதரர் ஜோசப் என்பவரை 1808இல் ஸ்பெயினின் அரசனாக்கினார். சார்லசும் பெர்டினான்டும் பதவி நீக்கம் செய்யப்பட்டதால் ஸ்பெயினில் ஆறாண்டு காலத்திற்கு நிலையான அரசு என்பது இல்லாமலானது. ஸ்பெயினில் ஏற்பட்ட அரசியல் குழப்பம் அதன் காலனிகளுக்குத் தங்கள் உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் வாய்ப்புகளை வழங்கியது. விரைவில் நாட்டுப்பற்றுமிக்கபுரட்சியாளர்கள்புரட்சியரசுகளை நிறுவினர். அவ்வரசுகள் 1810இல் சில சமூகப் பொருளாதார சீர்திருத்தங்களை அறிமுகம் செய்தன.

வெனிசுலாவில் சைமன் பொலிவரின் தலைமையிலான நாட்டுப்பற்றாளர்கள் தாங்கள் ஸ்பெயினிடமிருந்து விலகிவிட்டதாக அடுத்த ஆண்டில் வெளிப்படையாக அறிவித்தனர். இதனிடையே 1812இல் ஏற்பட்ட பூகம்பம் நாட்டுப்பற்றாளர்களின் வசமிருந்த பகுதிகளில் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. இதை வாய்ப்பாகக் கொண்டு ஸ்பெயின் அரசின் விசுவாசப் படையினர் நாட்டுப்பற்றாளர்களின் படைகளைத் தாக்கி, சைமன் பொலிவரையும் ஏனையோரையும் நியூகிரனடாவில் தஞ்சம்புகச் செய்தனர். (ஆளுநரின் ஆட்சிப் பகுதியில் இதயப் பகுதியாக இப்பகுதி இருந்தது).



சைமன் பொலிவர்

1813இல் மீண்டும் புதிய படையோடு வெனிசுலா திரும்பிய பொலிவர் "மரிக்கும் மட்டிலும் போர்" எனும் முழக்கத்துடன் போரைத் தொடங்கினார். ஜோஸ் தாமஸ் போவெஸ் என்பாரின் தலைமையில் போரிட்ட விசுவாசிகள் பொலிவரை தாய்நாட்டை விட்டு துரத்துவதில் மீண்டும் வெற்றி பெற்றனர். 1815வாக்கில் வெனிசுலாவிலும் ஸ்பானிய தென்அமெரிக்கா முழுவதும் சுதந்திரப் போராட்டங்கள் அனைத்தும் ஏறத்தாழ மரித்துப்போனது போலக் காணப்பட்டது. ஏழாம் பெர்டினான்டால் அனுப்பி வைக்கப்பட்ட பெரும்படை வெனிசுலாவையும் நியூ கிரனடாவின்



12th_History_TM_Unit_11_V2.indd 185 2/4/2020 10:57:00 AM

பெரும் பகுதியையும் மீண்டும் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றன. 1816இல் பொலிவரால் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு படையெடுப்பும் தோல்வியைத் தழுவியது.

ஆனால் அடுத்த ஆண்டில் (1817) மிகப்பெரிய அளவிலான புத்துயிர் ஊட்டப்பெற்ற சுதந்திரப் போராட்டம் உதயமானது. நாட்டின் வட பகுதிகளில் வெற்றி பெற்ற இப்போராட்டம் ஆன்டிஸ் மலைப் பகுதிகளிலும் பரவியது. போராட்டங்களுக்குப் பின்னர் சைமன் பொலிவர் ஒரு வலிமை மிகுந்த இராணுவ, அரசியல் சக்தியாக உருவானார். இத்தருணத்தில் லானெரோ (llanero) என்னும் கலப்பினத்தை சேர்ந்த மேய்ச்சல் சமூகத்தார் ஜோஸ் அன்டோனியா பயஸ் என்பவரின் தலைமையில் விடுதலைப் போராட்டத்தில் இணைந்தனர். 1818–19இல் நாட்டுப்பற்றாளர்களின் படைகள்பெற்ற வெற்றிகளில் இவர்கள் அளப்பரிய பங்களிப்புச் செய்தனர். கிழக்கு ஆன்டிஸ் மலைப்பகுதிவரை தன்னுடைய படைகளை நடத்திச் சென்ற பொலிவர் போயகா போர்க்களத்தில் தனது பகைவர்களை படுதோல்வி அடையச் செய்தார்.



போயகா போர்

நாட்டின் வட பகுதிகளில் பெற்ற வெற்றிகளை ஒருங்கிணைத்து வலுப்படுத்துவது சிரமமான பணியாயிற்று. 1819இல் பொலிவரால் அங்கோஸ்டுரா என்ற இடத்தில் கூட்டப்பட்ட மாநாட்டில், இன்றைய வெனிசுலா, கொலம்பியா, பனாமா, ஈக்வடார் ஆகியவை உள்ளிட்ட ஒன்றியத்திற்கு பொலிவரே குடியரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் அப்பகுதியில் நிலவிய கடுமையான வேறுபாடுகள் முந்நாள் ஸ்பானியக் காலனிகளை ஒரே நாடாக, இலத்தீன் அமெரிக்க ஐக்கிய நாடுகள் என மாற்றம் பெறவேண்டும் என்ற பொலிவரின் நம்பிக்கையைச் சிதைத்தன. மேலும் வெனிசுலாவின் கணிசமான பகுதியும், கொலம்பியாவின் ஆன்டிஸ் மலைப்பகுதியும் ஒட்டு மொத்த ஈக்வடாரும் அரசு விசுவாசிகளின் ஆதரவாளர்கள் வசமிருந்தன. 1820இல் நிலைமை சாதகமாக மாறின. அரசருடைய படையெடுப்பில் பங்கேற்பதற்காக கேடிஸ் எனுமிடத்தில் காத்திருந்த படைகள் புரட்சியில் இறங்கின. இதனைத்தொடர்ந்து 1821இல் நியூ கிரனடாவும், வெனிசுலாவும் விடுதலை பெற்றன. அதே ஆண்டில், கொலம்பியாவின் குகுடா எனும் நகரில் நடைபெற்ற மாநாட்டில் மென்மேலும் மையப்படுத்தப்பட்ட கிரான் கொலம்பியாவின் தலைவராக பொலிவரை தேர்வு செய்தது.

**சைமன் பொலிவர்:** பொலிவர் கராகஸ் பகுதியின் கிரியோல் வகுப்பைச் சேர்ந்த பழமை வாய்ந்த உயர்குடும்பத்தைச் சேர்ந்தவர். ஒரு கொள்கையாளராக, இராணுவத்தலைவராக அவர் விடுதலை இயக்கத்திற்கு அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தவராகத் திகழ்ந்தார். தன்னுடைய புகழ்பெற்ற 'ஜமைக்கா கடிதம்' (Jamaica Letter) எனும் கடிதத்தில் (1815இல் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட நிலையில் எழுதப்பட்டது) நாட்டுப்பற்றாளர்கள் பலமுறை தோற்கடிக்கப்பட்ட நிலையிலும் கூட சுதந்திரத்தின்பால் தனக்கிருந்த தளராத நம்பிக்கையை வலியுறுத்தினார். ஸ்பானியர்களின் காலனியாதிக்கத்தை விமர்சித்த அவர், தன்னாட்சியுடன் கூடிய மையப்படுத்தப்பட்ட குடியாட்சி அரசை நிறுவுவதே முந்தைய காலனிகளுக்கு இருக்கும் ஒரே பாதை எனக் கருதினார். முடிவாக அவர் விரும்பிய குடியாட்சியானது குழு ஆட்சியாகும் (Oligarchic). ஒரு நாடு இனங்களால் துண்டுபடுமேயானால் அங்கே ஒழுக்கம் நிறைந்த அரசு செயல்பட வாய்ப்பில்லை என நம்பினார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியிலும் இருபதாம் நூற்றாண்டிலும் கூட லத்தீன் அமெரிக்க விடுதலை இயக்கங்களுக்கும் இடது சாரிகளுக்கும் உத்வேகமூட்டும் ஒரு சக்தியாகவே பொலிவர் திகழ்ந்துள்ளார்.

## மெக்சிகோ புரட்சி

மெக்சிகோவின் சுதந்திரம் தாமதமாகவே பெறப்பட்டது. மெக்சிகோவில் 'கிரியோல்' மற்றும் 'தீபகற்பத்தினர்' (Penisulars) என இரு அதிகாரம் மிக்க சமூகப்பிரிவினர் இருந்தனர். இவர்கள் ஸ்பெயினிலோ அல்லது போர்த்துகல்லிலோ பிறந்த காலனியாதிக்கத் தலைவர்களாவர். மெக்சிகோ சமூகத்தின் அதிகாரமிக்க பிரிவினருக்கு ஸ்பெயினிடமிருந்து பிரிந்தால் தங்களின் பாரம்பரிய செல்வாக்கையும் அதிகாரத்தையும் இழக்கும் நிலையிருந்தது. 1808–1810க்கும் இடைப்பட்ட காலத்தில், இப்பகுதியில் ஸ்பெயினின் அதிகாரத்தைப் பாதுகாப்பதற்காக தீபகற்பத்தினர் வலுச்சண்டைகளை மேற்கொண்டனர். ஸ்பானிய



12th_History_TM_Unit_11_V2.indd 186 2/4/2020 10:57:01 AM

அரசர் இல்லாத நிலையில் அரசு நிர்வாகத்தை எவ்வாறு நடத்துவது என்ற கேள்விக்கு விடைகாண ஒரு மாநாட்டைக் கூட்டுவது எனும் முடிவை மெக்சிகோ நகரின் முக்கிய பிரிவினரான தீபகற்பத்தினர் எதிர்த்தனர். அவர்கள் ஆளுநரை அகற்றிவிட்டு கிரியோல்களைக் கொடுமைப்படுத்தினர். தங்களால் மேலாதிக்கம் செலுத்த இயலும் எனத்தெரிந்த திறமைகுன்றிய ஆளுநர்களை வரவேற்றனர். எப்படி இருந்தபோதிலும் தீபகற்பத்தினரின் இம்முயற்சிகளால் சுதந்திரப் போராட்டம் உதயமாவதைத் தடுக்க முடியவில்லை.



மிகுவல் ஹிடல்கோ



ஜோஸ் மரியா மோர்லோஸ்

மிகுவல் ஹிடல்கோ எனும் கத்தோலிக்கப் பாதிரியாரே மெக்சிகோவின் புரட்சிக்குத் தலைமையேற்றார். ஏழை மக்களுக்கு ஆதரவாக இருந்த அவர் பூர்வகுடி அமெரிக்கர்களின் ஏழ்மையான வாழ்க்கைச்சூழல் கண்டு அவர்கள் மீது அனுதாபம் கொண்டார். டோலோரஸ் திருச்சபையில் அவர் ஆற்றிய உணர்ச்சிகரமான சொற்பொழிவுகளில் மெக்சிகோவின் விடுதலையைக் கோரினார். ஸ்பெயின், கிரியோல்களின் படைகளுக்கு எதிராக மெஸ்டிசோ இன மக்களைக் கொண்ட புரட்சிப்படையொன்றுக்கு அவர் தலைமையேற்றார். இருந்தபோதிலும் அவர் 1811இல் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார். பின்னர் இவ்வியக்கத்திற்குத் தலைமையேற்ற ஜோஸ் மரியா மோர்லோஸ் 1813இல் ஸ்பெயினில் இருந்தவாறே சுதந்திரப் பிரகடனம் செய்தார். அவரும் 1815இல் தோற்கடிக்கப்பட்டார்.

மெக்சிகோவைச் சேர்ந்த கிரியோல்கள் அல்லது செல்வச்செழிப்புமிக்க வணிகர்கள் ஸ்பெயின் நாட்டு அரசியல் நிகழ்வுகளைக் கண்காணித்து வந்தனர். ஸ்பெயினில் முடியாட்சியை அகற்றிவிட்டு, புதியதோர் அரசியல் அமைப்பை உருவாக்குவதற்காக ஒரு இயக்கம் தயாராகிக் கொண்டிருந்தது. இது தங்களின் அதிகாரத்தைக் குறைத்துவிடும் என்று எண்ணிய கிரியோல்கள் 1821இல்சுதந்திரப்பிரகடனம்செய்தனர்.இதில்வியப்பு யாதெனில் இச்சுதந்திரப் பிரகடன இயக்கத்திற்கு தலைமையேற்ற இராணுவ அதிகாரிதான் முன்னர் மரியா மோர்லோசை தோற்கடித்தவராவார். தன்னையே பேரரசராக அறிவித்துக் கொண்ட இவருடைய கொடிய ஆட்சி 1824இல் அகற்றப்பட்டது. மெக்சிகோ தன்னைத்தானே ஒரு குடியரசாக அறிவித்துக் கொண்டது.

### பிரேசிலின் சுதந்திரம்

பிரேசில் போர்த்துகலின் ஒரு காலனியாக இருந்தது. 1808இல் நெப்போலியன் போர்த்துகலின் மீது படையெடுத்தபோது போர்த்துகலின் அரசர் டாம் ஜோவோ (ஆறாம் ஜான்) பிரேசிலுக்குத் தப்பியோடினார். அங்கே அவர் நிலச் சீர்திருத்தங்களை அறிமுகம் செய்தல், இராணுவத்தை உருவாக்குதல், மருத்துவ, கலைக் கல்லூரிகளை நிறுவுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு பிரேசிலை அனைத்து அம்சங்களிலும் முன்னேற்றமடையச் செய்தார். நெப்போலியன் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் போர்த்துகீசிய அரசர் தொடர்ந்து பிரேசிலில் தங்கியிருந்தார். ஆனால் அவருடைய அதிகாரத்திற்கு எதிராக சவால்கள் தோன்றியபோது, காலனியான பிரேசிலை தனது மகன் டாம் பெட்ரோவின் கைகளில் ஒப்படைத்துவிட்டு போர்த்துகல் சென்றுவிட முடிவு செய்தார்.



டாம் பெட்ரோ

பிரேசிலின் மேட்டுக்குடி மக்கள் ஆப்பிரிக்க அடிமைகளைச் சார்ந்திருந்தனர். அது போர்த்துகல் உடனான தொடர்ந்த உறவுக்கு சாதகமாய் அமைந்தது. பெருந்தோட்டங்களின் உரிமையாளர்கள் ஆப்பிரிக்க அடிமை வணிகத்தைச் சார்ந்திருந்தனர். அவ்வணிகத்தைப் போர்த்துகல் கட்டுப்படுத்தியது. 1800இல் பிரேசிலின் மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழப் பாதி மக்கள் அடிமைகளாக இருந்தனர். இதனால் கிரியோல்கள் அரசியல் முன் முயற்சிகளில் தயக்கங்காட்டவும் அதன் விளைவாக சமூகத்தில் தங்களைக் காட்டிலும் கீழானவர்களின் மீதான கட்டுப்பாட்டினை இழப்பதற்கும் வாய்ப்பிருந்தது. ஆகவே போர்த்துகல்லில் இருந்த அதிகாரிகள் பிரேசிலில் ஜோ மேற்கொண்ட சீர்திருத்தங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தனர். டாம் பெட்ரோவையும் போர்த்துகல்லுக்குத் திரும்பிவரக் கோரினர். இருந்தபோதிலும் டாம் பெட்ரோ பிரேசிலின் சுதந்திரத்தை அறிவித்துவிட்டு அங்கேயே



12th_History_TM_Unit_11_V2.indd 187 2/4/2020 10:57:01 AM

தங்கிவிட முடிவு செய்தார். 1822இல் பிரேசில் போர்த்துகல்லிடமிருந்து விடுதலைபெற்றது. தென்அமெரிக்காவில் அரசியல் அமைப்பிற்கு கட்டுப்பட்ட முதல் முடியரசாக அது மாறியது. முதலாம் பெட்ரோ அதன் முதல் பேரரசர் ஆவார்.

### ஏனைய புரட்சிகள்


சான் மார்ட்டின்

அர்ஜென்டினாவின் விடுதலை வீரர் சான் மார்ட்டின், சிலியின் விடுதலை வீரரான பெர்னார்டோ ஓ ஹிகின்ஸ் என்பாருடன் இணைந்தார். இருவரும் இணைந்து 1818இல் சிலிக்கும் 1820இல் பெரு நாட்டிற்கும் விடுதலை பெற்றுத் தருவதில் வெற்றி பெற்றனர். பொலிவரும் சான் மார்ட்டினும் ஈக்வடாரில் உள்ள குவாயாகில் துறைமுகத்தில் லத்தீன் அமெரிக்காவின் ஒருங்கிணைப்புக்கான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கச் சந்தித்தனர். ஐரோப்பிய பாணியிலான, அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சி அரசு அமைக்கப்பட வேண்டுமென சான் மார்ட்டின் விரும்பினார். பொலிவர் குடியாட்சி அரசு முறை அமைவதை விரும்பினார். அவர்களிடையே ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. இதனிடையே ஓய்வு பெற்ற சான் மார்ட்டின் முழு அதிகாரத்தையும் பொலிவரிடம் ஒப்படைத்தார். 1826 காலப்பகுதியில் அனைத்து தென்அமெரிக்கக் காலனிகளுக்கும் பொலிவர் சுதந்திரம் பெற்றுக்கொடுத்தார்.

காலனிகள் அனைத்தும் சுதந்திரம் பெற்ற பின்னர், அனைத்து இலத்தீன் அமெரிக்க நாடுகளையும் ஒருங்கிணைத்து கிரான் கொலம்பியா எனும் பெயரில் ஒரே நாடாக மாற்ற பொலிவர் முயற்சி மேற்கொண்டார். ஆனால் மலைகளையும் காடுகளையும் கொண்ட கரடு முரடான நிலவியல் அமைப்பினாலும், அதிகாரப் போட்டிகளாலும் அவரது கனவு நனவாகாமல் போயிற்று. பெரும்பான்மையான தென்அமெரிக்க நாடுகள் தங்களைக் குடியரசுகளாக அறிவித்துக் கொண்டாலும் ஸ்பெயினின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைந்தாலும், அவைகள் பெருமளவில் அந்நிய நாடுகளையே சார்ந்துள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் போக்கில் அமெரிக்காவும் பிரான்சும் மெக்சிகோவின் மீது படையெடுத்தன. அர்ஜென்டினா, சிலி போன்ற நாடுகளின் மீது இங்கிலாந்து தொடர்ந்து தனது மேலாதிக்கச் செல்வாக்கை நீண்டகாலம் வரை கொண்டிருந்தது. ஒவ்வொரு லத்தீன் அமெரிக்க நாட்டிலும் கருத்து வேறுபாடு கொண்ட குழுக்கள் எதிரெதிர் தாராளவாதக் கட்சிகளையும் பழமைவாதக் கட்சிகளையும் நடத்தி நடுநிலையற்ற, ஏற்றதாழ்வுகளைக் கொண்ட சமூகக்கட்டமைப்பை பாதுகாக்கின்றன. ஒரு பக்கம் சகலவிதமான உரிமைகளையும் பெற்றுள்ள மிகப்பெரும் நில உடைமையாளர்கள் மறுபுறம் உரிமைகளற்ற கடுமையான வறுமையில் வாடும் சாதாரண மக்கள் என்பதே அச்சமூகங்களின் குணாதிசயமாக உள்ளது.

இருபதாம் நூற்றாண்டில் குறிப்பாக இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர், அமெரிக்கா தனக்குச் சாதகமான, வளைந்து கொடுக்கக்கூடிய சர்வாதிகார அரசுகள் மூலம் (வாழைப்பழ குடியரசுகள் என குறிப்பிடப்படுகின்றன) இந்நாடுகளைக் கட்டுப்படுத்துவதால் தென்அமெரிக்கா இடர்ப்பாடுகள் நிறைந்த கண்டமாகவேயுள்ளது.

## 11.4 தொழிற்புரட்சி

பிரெஞ்சுப் புரட்சியின் பின்விளைவில், நெப்போலியன் பிணையப்பணம் பெறுவதற்காக ஒட்டுமொத்த ஐரோப்பாவையும் தன்வசம் வைத்திருந்தபோது, மனிதகுல வரலாற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதை தனது விதியாகக் கொண்ட மற்றொரு புரட்சி இங்கிலாந்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதுவே தொழிற்புரட்சியாகும். தொழிற்புரட்சி என்பது பெருமளவிலான பொருட்களை மிகப்பெரும் ஆலைகளில் உற்பத்தி செய்யும் முறையைப் பின்பற்றுதலைக் குறிக்கிறது. இது கைவினைஞர்களின் குடிசைத் தொழிற்கூடங்களிலோ அல்லது பட்டறைகளிலோ பொருட்களைத் தயாரிப்பது எனும் பழைய முறைக்கு எதிரானது.

பருத்தித் தொழிற்சாலைகளில் புரட்சியை ஏற்படுத்திய சில முக்கியமான கண்டுபிடிப்புகளின் தோற்றமே தொழிற்புரட்சியின் முதல் கட்டமாகும். நீராவியின் பயன்பாடானது நிலக்கரியைப் பயன்படுத்தி இரும்பை உருக்கும் பழைய முறையைக் கைவிடச் செய்தது. நிலக்கரி, இரும்புத் தொழிற்சாலைகள் மிக வேகமாக வளர்ந்தன. பின்பு செய்திப் பரிமாற்றத்திற்கான வழிவகைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. இடம் விட்டு இடம் செல்லக்கூடிய முதல் பயணிகள் ரயில் (1830), நீராவிப்படகு, மின்சாரத் தந்தியின் பயன்பாடு (1835) ஆகியவை நடைமுறைக்கு வந்தன. ஒரு நூறாண்டு காலத்தில் இங்கிலாந்து முற்றிலுமாக மாற்றப்பட்டது.


12th_History_TM_Unit_11_V2.indd 188
2/4/2020 10:57:01 AM

இரண்டாவது தொழிற்புரட்சியானது (1870–1914) எஃகு உற்பத்தியிலும் பெட்ரோலியம், மின்சாரம் ஆகிய துறைகளிலும் புதிய முறைகளை எதிர்கொண்டது. ஒட்டுமொத்த ஐரோப்பாவும் வட அமெரிக்காவும் இக்காலப்பகுதியில் முதல் கட்டத் தொழிற்புரட்சியின் தாக்கத்தினை உணரத் தொடங்கின.

### சிறப்புக் கூறுகள்

தொழிற்புரட்சியின் இன்றியமையாத கூறு, அறிவியல் தொழிலில் புகுத்தப்பட்டதுதான். இரும்பு, எஃகு ஆகியவற்றின் பயன்பாடு நிலக்கரி மற்றும் நீராவி போன்ற ஆற்றலுக்கான புதிய மூலப்பொருட்களின் பயன்பாடு, உற்பத்தியை அதிகரிக்கச்செய்த புதிய இயந்திரங்களின் கண்டுபிடிப்பு, ஆலைமுறை என்றழைக்கப்பட்ட வேலைகளை ஒழுங்கு செய்த புதியமுறைகள் ஆலைகளில் நடைமுறைபடுத்தப்பட்ட வேலை பிரிவினை, சிறப்புத் தொழிற்திறன் முறைகள், போக்குவரத்திலும் செய்தித் தொடர்புகளிலும் ஏற்பட்ட முன்னேற்றங்கள் ஆகியவை பேரளவிலான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதை சாத்தியமாக்கியது.

### இங்கிலாந்தில் தொழிற்புரட்சி ஏற்பட்டதற்கான காரணங்கள்

பல்வேறு காரணங்களினால் தொழிற்புரட்சி முதன் முதலாக இங்கிலாந்தில் தொடங்கியது.

அ) வணிகப்புரட்சியின் தாக்கம்: வியாபார, வணிகத் துறைகளில் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றங்கள், முதலாளிகள் எனும் புதிய வர்க்கத்தை உருவாக்கியது. இவர்கள் தங்களிடமிருந்த உபரிச் செல்வத்தை முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளைத் தொடர்ந்து தேடினர். இதன் விளைவாக உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான முதலீடு தாராளமாக கிடைத்தது.

ஆ) கடல் கடந்து காலனிகளை உருவாக்கும் போட்டியில் இங்கிலாந்து தாமதமாக இணைந்தாலும், காலப்போக்கில் இங்கிலாந்து மேலாதிக்கம் பெற்றது. ஸ்பெயின், போர்த்துகல், பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய சக்திகளை அது தோற்கடித்தது. 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகின் நான்கில் ஒரு பகுதி இங்கிலாந்தின் காலனிகளாக இருந்தது. அது உலக மக்கள் தொகையில் 25 விழுக்காட்டு மக்களை (ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆசியா) ஆட்சி செய்தது. இதனால் இக்காலனி நாடுகளில் ஆலைப்பொருட்களுக்கான தேவை வளர்ந்து கொண்டேயிருந்தது.

இ) இங்கிலாந்தில் மக்கள்தொகை வளர்ச்சிக்கு ஏற்றவாறு சந்தைகளும் விரிவடைந்தன. 1600இல் நான்கு மில்லியன்களாக இருந்த இங்கிலாந்தின் மக்கள்தொகை 1700இல் ஆறு மில்லியன்களாகவும் பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவில் ஒன்பது மில்லியன்களாகவும் பெருகியது.

ஈ) பல்வேறு காலனிகளின் குறிப்பாக இந்தியாவின் செல்வங்கள் சுரண்டப்பட்டு இங்கிலாந்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது. அதனால் தொழிற்சாலைகளில் முதலீடு செய்யத் தேவையான மூலதனம் தாராளமாகக் கிடைத்தது.

உ) ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இங்கிலாந்து மிகவும் தாராளத்தன்மை கொண்ட நாடாக இருந்தது. அதன் அரசியல் உறுதித்தன்மை தொழில்களின் வளர்ச்சிக்குச் சாதகமான சூழலை உருவாக்கியது.

ஊ) நிலக்கரி, இரும்பு போன்ற மூல வளங்கள் இங்கிலாந்தில் அதிக அளவில் கிடைத்ததென்பது தொழிற் வளர்ச்சிக்கு மற்றுமொரு காரணமாகும். 1800இல் இங்கிலாந்து பத்து மில்லியன் டன் நிலக்கரியை அல்லது உலகின் மொத்த நிலக்கரி உற்பத்தியில் 90 விழுக்காட்டினை உற்பத்தி செய்தது.

எ) தொழிற்புரட்சிக்கு முன்பு வேளாண்மையிலும் இங்கிலாந்து விரைவான முன்னேற்றத்தைப் பதிவு செய்திருந்தது. இயந்திரமயமாக்கலின் மூலமாக அதிகஅளவிலான நிலங்கள் வேளாண்மையின் கீழ் கொண்டுவரப்பட்டன. செல்வச் செழிப்பு மிக்க நில உரிமையாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் சிறிய அளவிலான நிலங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு பெரும் பண்ணைகளாக மாற்றப்பட்டன. புதிய வேளாண்மைத் தொழில் நுட்பங்களுடன் பயிர்சுழற்சி முறையும் அறிமுகமானதால் வேளாண் உற்பத்தி அதிகமானது. ஆனால் இது விவசாயத் தொழிலாளர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தை ஏற்படுத்தியது. அனைத்தும் இழந்து திவாலாகிப்போன விவசாயிகள் நகரங்களுக்குக் குடிபெயர்ந்தனர். பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து இவ்வாறு சென்றவர்களே பல்வேறு தொழிற்சாலைகளுக்குப் பெருமளவிலான உழைப்பாற்றலை வழங்குவோராய் இருந்தனர்.

ஏ) தனது கடற்கரைப்பகுதி முழுவதிலும் இங்கிலாந்து சிறப்பாக நிறுவப்பட்டிருந்த துறைமுகங்களைக் கொண்டிருந்தது. அது



12th_History_TM_Unit_11_V2.indd 189 2/4/2020 10:57:01 AM

உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வணிகத்தை எளிதாக்கியது.

ஐ) நிலப்பகுதியிலிருந்து சற்றே தொலைவில் அமைந்திருந்த இங்கிலாந்தின் புவியியல் அமைவிடமும், அந்நியர் படையெடுப்புகளிலிருந்து சற்றே பாதுகாப்பாக அமைந்திருந்தமையும் தொழிற்புரட்சி ஏற்படுவதற்கு மற்றுமொரு காரணமாக அமைந்தது.

ஒ) இங்கிலாந்துத் தீவுகளில் நிலவிய மிதமான தட்பவெப்பநிலை பருத்தியிழைத் துணி உற்பத்திக்கு உகந்ததாக இருந்தது.


## தொழிற்புரட்சி காலத்தைய முக்கியக் கண்டுபிடிப்புகள்

### தொழிற்சாலை அமைப்பு

தொழிற்புரட்சிக்கு முன்னர் பொருள்களின் உற்பத்தியானது தொழிற்கூடங்களிலோ அல்லது தொழிலாளர்களின் குடிசைகளிலோ நடைபெற்றது. மண்பாண்டத்தொழில் செய்வோர், சக்கரங்கள் தயாரிப்போர், வண்டிகள் செய்வோர், நூற்போர், நெசவு செய்வோர் தங்களின் திறன்களையும் வலுவையும் கொண்டு விரும்பிய பொருட்களை உற்பத்தி செய்தனர். புதிய கண்டுபிடிப்புகளின் வருகைக்குப் பின்னர் இப்பணிகளை இயந்திரங்கள் செய்தன. இயந்திரங்களைக் குறிப்பிட்ட இடைவெளிகளில் இயக்குவதற்கு தனித்திறன் பெற்ற அல்லது ஓரளவு திறன் பெற்ற தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். தொழிற்சாலைகள் பெருமளவிலான பொருட்களை உற்பத்தி செய்யுமிடமாயிற்று.

### பருத்தித் தொழிற்சாலைகள்

பருத்தித் தொழிலில்தான் முதன்முதலாக தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. நூற்பு இயந்திரம், நூற்புச் சட்டகம், பறக்கும் நாடா, கிராம்டன் மியூல் எனும் நூற்கும் இயந்திரம் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டதின் காரணமாக இது சாத்தியமாயிற்று. பறக்கும் நாடா 1733இல் ஜான் கே என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கண்டுபிடிப்புக்கு முன்னர் நெசவு செய்பவர் தனது கையிலிருக்கும் நாடாவிலுள்ள நூலை, தனக்கு முன்பாக நீளவாக்கில் இருக்கும் நூல்களுக்கிடையே (பாவு) மெதுவாகச் செலுத்தி எடுக்க வேண்டும். பறக்கும் நாடா கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் இப்பணி வேகமாக நடைபெற்று நெசவு செய்பவரின் உற்பத்தி இருமடங்காயிற்று. 1764இல் ஸ்பின்னிங் ஜென்னி எனும் நூற்பு இயந்திரம் ஜேம்ஸ் ஹார்கிரீவ்ஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. பாரம்பரிய முறையின்படி ஒரே ஒரு இழையை மட்டுமே நூற்க இயலும். ஆனால் இந்த இயந்திரம் ஒரே நேரத்தில் எட்டு இழைகளைப் பின்னி நூற்றது. ரிச்சர்டு ஆர்க்ரைட் என்பவரால் 1769இல் உருவாக்கப்பட்ட நீர்ச்சட்டகம் என்ற இயந்திரத்தால் ஒரே சமயத்தில் 128 நூல்களை நூற்க முடிந்தது. ஸ்பின்னிங் ஜென்னியையும் நீர்ச்சட்டகத்தையும் இணைத்து சாமுவெல் கிராம்டன் மியூல் எனும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். இவ்வியந்திரத்தின் மூலம் நெசவுமுறையைப் பெருமளவில் கட்டுக்குள் வைத்துக்கொள்ள முடிந்ததோடு ஒரே நேரத்தில் பல்வகைப்பட்ட நூல்களையும் நூற்க முடிந்தது.



ஸ்பின்னிங் ஜென்னி

இங்கிலாந்து 1700இல் 500 டன் பருத்தியை மட்டுமே இறக்குமதி செய்தது. நூற்றல், நெசவு செய்தல் ஆகியவற்றில் புதிய கண்டுபிடிப்புகள் செய்யப்பட்டதோடு, ஜவுளியானது ஆலைகளில் அதிகமாக உற்பத்தியானதைத் தொடர்ந்து கச்சாப் பருத்திக்கான தேவை வியப்பூட்டும் அளவுக்கு உயர்ந்தது. 1860 முதல் ஒவ்வொரு ஆண்டும் இங்கிலாந்து 5,00,000 டன் பருத்தியை இறக்குமதி செய்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்தின் ஜவுளித் தொழிற்சாலைகளின் மையமான மான்செஸ்டர் 'காட்டன்பொலிஸ்' எனும் புனைப் பெயரைப் பெற்றது.

### இரும்புத் தொழிற்சாலைகள்

பாரம்பரியமாக இரும்பானது இரும்புத் தாதுவை காய்ச்சி உருக்கி வடித்தெடுக்கப்பட்டது. இதற்குப் பெருமளவிலான கரி தேவைப்பட்டது. கரி விறகினை எரிப்பதன் மூலம் பெறப்பட்டது. 1700 வாக்கில் காடுகள் அழிக்கப்பட்டதன் விளைவாக கரி உற்பத்திக்கான மூலப்பொருள் வெகுவாகக் குறைந்தது. 1709இல் இங்கிலாந்தால் இப்பிரச்சனையை ஓரளவு தீர்க்க முடிந்தது. அப்போது ஆபிரகாம் டர்பி எனும் டெர்பிஷயரைச் சேர்ந்த நிலக்கரிச் சுரங்க உரிமையாளர் இரும்புத்தாதுவை



12th_History_TM_Unit_11_V2.indd 190 2/4/2020 10:57:01 AM

உருவாக்குவதற்கு நிலக்கரியைப் பயன்படுத்தலாம் என்பதைக் கண்டறிந்தார். ஆனால் சுரங்கங்களில் நிறைந்துவிடும் நீர் நிலக்கரியை எடுப்பதற்கு முக்கியத்தடையாய் இருந்தது. 1712இல் முதன்முதலாக தாமஸ் நியூகோமென் நிலக்கரிச் சுரங்களிலிருந்து நீரை வெளியேற்றுவதற்கு நீர் ஏற்றும் இயந்திரத்தை உருவாக்கினார். 1769இல் ஜேம்ஸ்வாட் இதை மேலும் மேம்படுத்தினார். அவரும் தொழில் முனைவோராய் இருந்த மாத்யூ பவுல்ட்டனும் இணைந்து 500 நீராவி இயந்திரங்களைத் தயாரித்தனர். அவைகள் புதிய தொழிற்சாலைகளுக்குத் தேவையான ஆற்றலை விநியோகம் செய்ய பயன்பட்டன. ஆற்றல் மூலம் இயக்கப்படும் இயந்திரங்களின் வருகையோடு ஆலைமுறையானது விரிவான அளவில் ஏற்றம் பெற்றது.



**சுரங்கங்களில் இருந்து நிலக்கரியை எடுக்கும் நியூகோமென் இயந்திரம்**

நிலக்கரி புகையற்றது. மேலும் கரியைக் காட்டிலும் அதிக வெப்பத்தைத் தரவல்லது. இதன் காரணமாக இரும்புத் தொழிற்சாலைகள் நிலக்கரிச் சுரங்கங்களின் அருகே அமைக்கப்பட்டன. அதிக அளவிலான இரும்பு உற்பத்தியால் வீட்டு உபயோகப் பொருட்களான கரண்டிகள், தட்டுகள் ஆகியன இரும்பினாலே செய்யப்பட்டன. ஆலைகளும்கூட வலுவான இரும்பு தூண்களையும் சட்டங்களையும் பயன்படுத்திக் கட்டப்பட்டன.

மிகப்பெரும் கட்டுமானங்களில் இரும்பு பயன்படுத்தப்படுவதைக் கண்டு ஈர்ப்புக்குள்ளான பிரெஞ்சுக்காரர்கள் 1889இல் 324 மீட்டர் உயரமுள்ள ஈபில் கோபுரத்தை (Eiffel Tower) பாரிசில் எழுப்பினர்.

### நீராவி இயந்திரங்கள்

நீராவி இயந்திரங்களுக்கு முன்னதாகவே நீராவிப்படகானது போக்குவரத்து சாதனமாக இயங்கின. 1802இல் கிளைடு கால்வாயின் கழிமுகத்தில் ஒரு நீராவிப்படகு இயங்கியது. 1804இல் முதல் ரயில் என்ஜின் உருவாக்கப்பட்டது. 1830இல் லிவர்பூலுக்கும் மான்செஸ்டருக்கும் இடையே இருப்புப்பாதை திறக்கப்பட்டது. ஜார்ஜ் ஸ்டீபன்சன்னுடைய "ராக்கெட்" என்ற ரயில் என்ஜின் ஒரு மணி நேரத்தில் முப்பது மைல்களுக்கும் மேலான வேகத்தில் இயங்கியது. அக்காலத்தில் இது கற்பனை செய்து பார்க்கமுடியாத ஒன்றாகும்.



**ராக்கெட் – நீராவி என்ஜின்**

1807இல் ராபர்ட் புல்டன் எனும் அமெரிக்கர் முதல் வெற்றிகரமான நீராவிப்படகினை உருவாக்கினார். 1838 ஏப்ரலில் சைரஸ், கிரேட் வெஸ்டர்ன் எனும் முதல் நீராவிக்கப்பல்கள் அட்லாண்டிக் கடலைக் கடந்தன. ஆங்கிலேயப் பொறியாளரான இசாம்பார்டு கிங்டம் புருனல் 1843இல் "SS கிரேட் பிரிட்டன்" என்ற முழுவதும் இரும்பினால் செய்யப்பட்ட கப்பலை உருவாக்கினார். இக்கப்பல் சுழல்விசை இயக்கத்தின் மூலம் முன்னோக்கிச் செலுத்தப்பட்டது. இதற்கு முன்னர் சுழல் விசைக்குப் பதிலாக துடுப்புச் சக்கரங்களே பயன்படுத்தப்பட்டன.

### சாலைகள்

உற்பத்தியின் பெருக்கத்தைத் தொடர்ந்து நல்ல சாலைகளைப் பெற்றிருப்பது முக்கியமாயிற்று. ஆனால் சாலைகள் மோசமாக இருந்ததால் பயண நேரம் அதிகமானதோடு பெருமளவு முயற்சியும் தேவைப்பட்டது. மிகப்பெரும் தொழிலதிபர்கள் கொடுத்த அழுத்தத்தின் காரணமாகச் சாலைகளைப் பராமரிப்பதற்கென ஆட்கள் நியமனம் செய்யப்பட்டனர். இவர்கள் சாலைகளை சரியாகப்



12th_History_TM_Unit_11_V2.indd 191 2/4/2020 10:57:01 AM

பராமரிப்பதற்காக மக்களிடமிருந்து சாலைவரி வசூலித்தனர். ஜான் லவுடன் மெக்காடம் என்பவர்தான் குறைந்தசெலவில் வலுவான சாலைகள் அமைக்கும் முறையைக் கண்டுபிடித்தார்.

மெக்காடமயமாக்குதல் என்பது உடைக்கப்பட்ட கற்களைப் பரப்பி அதன்மேல் அடுத்தடுத்த அடுக்குகளாகக் கற்களைப் பரப்பி அதன்மேல் உருக்கப்பட்ட தாரை ஊற்றுவதாகும்.




ஜான் மெக்ஆடம்

1835இல் முதல் மின் தந்திமுறை நடைமுறைக்கு வந்தது. பதினாறு ஆண்டுகளுக்குப் பின்னர் இங்கிலாந்திற்கும் பிரான்சுக்குமிடையே கடலடித் தந்தி வடம் அமைக்கப்பட்டது. ஒரு சில ஆண்டுகளில் தந்தி முறை உலகம் முழுவதும் பரவியது. மிகப்பெரும் வடிவத்தாலான புகை போக்கிகளைக் கொண்ட நவீன ஆலைகள் மான்செஸ்டர், லங்காஷயர், ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ ஆகிய நகரங்களின் நிலப்பரப்பை ஆக்கிரமித்தன. 1750இல் இங்கிலாந்தில் உள்ள லண்டன், எடின்பர்க் ஆகிய இருநகரங்களில் 50,000த்திற்கும் அதிகமான மக்கள் வசித்தனர். 1851இல் இதைப்போன்ற நகரங்களின் எண்ணிக்கை 29 ஆனது.

### தொழிற்புரட்சியின் இரண்டாம் கட்டம்: ஜெர்மனியிலும் அமெரிக்காவிலும்


தொழிற்புரட்சியின் இரண்டாம் கட்டத்தைச் சேர்ந்த அரிய கண்டுபிடிப்புகளில் பெருபான்மையானவை தனிப்பட்ட கண்டுபிடிப்பாளரின் மூளையில் இருந்து உதிக்காமல் இயற்பியல் வேதியியல் ஆய்வாளர்களின் பரிசோதனைச் சாலைகளிலிருந்து வெளிவந்தன. தானியங்கி எந்திரங்களின் அறிமுகம், பேரளவு உற்பத்தியின் பெருமளவுப் பெருக்கம், உற்பத்திச் செயல்பாட்டில் மிக நுண்ணிய அளவிலான வேலைப் பிரிவினை ஆகியவை இரண்டாம் கட்டத் தொழிற்புரட்சியின் ஏனைய இன்றியமையாக் கூறுகளாகும்.




தொழில் நகரம் – மான்செஸ்டர்

பதினெட்டாம் நூற்றாண்டு முழுவதிலும் மேற்கு ஐரோப்பாவில் சீரான தொழில் வளர்ச்சியும் பெருமளவிலான வணிக நடவடிக்கையும் ஏற்பட்டன. வங்கித் தொழிலின் வளர்ச்சியும், சாலைகள், கால்வாய்கள் என உள்நாட்டுப் போக்குவரத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்களும் இதற்குச் சான்றுகளாகும். பிரான்சிலும் பிரஷ்யாவிலும் அரசின் ஆதரவில் ஆலைகள் இருந்தன. லெ குருசாட்டில் அமைந்திருந்த கண்ணாடித் தொழிற்சாலையும், சைலீசியாவின் பட்டு உற்பத்தியும் மிக முக்கியமானவை. ஐரோப்பியக் கண்டத்தின் வணிக, தொழில் முன்னேற்றம் நெப்போலியனின் போர்களால் தடைப்பட்டது. அமைதி ஏற்பட்ட பின்னர் இங்கிலாந்தின் இயந்திரங்கள் பிரான்சிலும் ஜெர்மனியிலும் மிகச் சுதந்திரமாக அறிமுகமாயின. நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் வந்த முப்பது ஆண்டுகளில் மேற்கு ஐரோப்பா முழுவதிலும் நீராவி ஆற்றல் மிக விரைவாகப் பயன்பாட்டிற்கு வந்தது. 1847காலப்பகுதியில் பாரிஸ், லியான்ஸ், மார்சிலெஸ், போர்டியாக்ஸ், தௌலௌஸ் போன்ற பிரான்சின் நகரங்களில் மிகப்பெரும் ஆலைகள் உருவாயின. ஆங்கிலேய அறிவியல் அறிஞரான மைக்கேல் பாரடே மின்சாரத்தைக் கண்டறிந்தார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்கக் கண்டுபிடிப்பாளர் தாமஸ் ஆல்வா எடிசன் தான் கண்டுபிடித்த எரியும் மின்சார பல்புகளை வீடுகளில் பயன்படுமாறு மேம்படுத்தினார். இதனால் 1870களில் மின்விசை உற்பத்திக் கருவிகள் உருவாக்கப்பட்டன. அதனால் மின்சாரம் பொதுப்பயன்பாட்டிற்கு வருவது சாத்தியமானது.

ஜெர்மனியில் பிரஷ்யாவின் தலைமையில் செயல்பட்ட நாடுகள் செய்தொழில்களிலும் தொழில் உற்பத்தியிலும் இங்கிலாந்தின் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தின. சுதந்திர வணிகத்தைப் பொதுக் கொள்கையாகக் கொண்ட, நாடுகள் அங்கம் வகிக்கும் ஸோல்வரெய்ன் எனும் அமைப்பு பிரஷ்யாவில் உருவாக்கப்பட்டது. இதனால் சுங்கச் சாவடிகள் அகற்றப்பட்டன.



டீசல் என்ஜின்



ருடால்ப் டீசல்

1871இல் ஜெர்மனி இணைக்கப்பட்டது வேகமான தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டது. மின்சாரத்தின் கண்டுபிடிப்பும் பயன்பாடும் அத்துடன் ருடால்ப் டீசல் கண்டுபிடித்த டீசல் என்ஜினும் சேர்ந்து ஜெர்மனியை ஐரோப்பியாவில் மோட்டார்வாகன உற்பத்தியின் தலைமைவகிக்கும் நாடாக மாற்றியது. டெய்ம்லர், பென்ஸ் ஆகிய இரு மோட்டார் வாகனங்கள் ஜெர்மனியிலும், உலகத்திலும் பிரபலமான அடையாளச் சின்னங்களாயின. ஜெர்மனி இரும்பு எஃகுத் தொழிலில் தனது முத்திரையைப் பதித்தது. வேளாண்மையில் ரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்படுவதற்கும், ஜவுளி ஆலைகளில் சாயம் பயன்படுத்தப்படுவதற்கும், மின்சார சாதனங்கள் உற்பத்தியிலும் ஜெர்மனி தனது பங்களிப்பைச் செய்தது.


பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஜெர்மனி, மிகப் பெருமளவில் தொழில்மயமான நாடாக உருவானது. தொழிற்புரட்சியின் தாயகமான இங்கிலாந்தை மிஞ்சி அமெரிக்காவின் போட்டியாளராகத் தன்னை நிலைநாட்டியது. மின்சாரத்தில் ஜெர்மனியின் சீமன்ஸ் போன்ற நிறுவனங்கள் ஏனைய நாடுகளில் இருந்த தங்களைப் போன்ற நிறுவனங்களைக் காட்டிலும் மேம்பட்டவைகளாகத் திகழ்ந்தன. வேதியியலில் பொட்டாசியம் உப்பு தயாரிப்பு, சாயம், மருத்துவப் பொருட்கள் உற்பத்தி, செயற்கை பொருட்கள் ஆகியவற்றில் ஜெர்மனி முன்னணி வகித்தது. பேயர், ஹோசெட் போன்ற நிறுவனங்கள் ஜெர்மனியின் இரசாயனத் தொழிலுக்குத் தலைமை தாங்கின.



வெர்னர் வான் சீமன்ஸ்


### அமெரிக்காவில் தொழிற்புரட்சி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் பெருமளவில் ஒரு விவசாய நாடாகவே விளங்கிற்று. காலனிகளின் எண்ணிக்கை அதிகமானதற்கு ஏற்றவாறு மக்கள் தொகையும் பெருகியது. ஆலையை இயக்குவதில் அனுபவம் பெற்றிருந்த ஆங்கிலக் குடிமகனான சாமுவெல் சிலேட்டர் அமெரிக்காவின் ரோட் ஐலென்டைச் சேர்ந்த தொழில் அதிபரும், ஏற்கனவே ஒரு ஆலையை இயக்குவதில் வெற்றிபெற முடியாமல் இருந்தவருமான மோசஸ் பிரவுன் என்பவருடன் இணைந்து பணிசெய்ய விரும்பினார். பிரவுனும் அதற்கு இசைந்ததன் விளைவாக அவ்வாலை 1793இல் செயல்படத் துவங்கியது. அதுவே அமெரிக்காவின் நீர் உருளையால் இயக்கப்பட்ட முதல் ஜவுளி ஆலையாகும். 1800இல் தொழில் முனைவோர் பலர் சிலேட்டரின் ஆலையைப் போன்றே பல ஆலைகளை உருவாக்கினர். அமெரிக்க குடியரசுத்தலைவரான ஆண்ட்ரூ ஜேக்சன், சிலேட்டரை "அமெரிக்கத் தொழிற்புரட்சியின் தந்தை" எனப் போற்றினார்.




சாமுவெல் சிலேட்டர்

அமெரிக்காவின் உள்நாட்டுப் போருக்கு முன்னதாகவே சாமுவெல் F.B. மோர்ஸ் தந்தி முறையையும், எலியாஸ் ஹோவ் என்பவர் தையல் இயந்திரத்தையும் கண்டுபிடித்தனர். உள்நாட்டுப் போருக்குப் பின்னர் தொழில்மயமாதல் மிகவும் விரைவாக நடைபெற்றது. 1869இல் மக்களையும், கச்சாப் பொருட்களையும் முடிவுற்றப் பொருட்களையும் கொண்டு செல்வதற்காக கண்டங்களைக் கடந்து செல்லும் ரயில்பாதை அமைக்கும் பணி முடிவுற்றது. தாமஸ் ஆல்வா எடிசனால் கண்டுபிடிக்கப்பட்ட மின்சாரமும் (1879) அலெக்ஸாண்டர் கிரகாம் பெல்லால் கண்டுபிடிக்கப்பட்ட தொலைபேசியும் (1876) மொத்த உலகையே மாற்றியது.



தாமஸ்
ஆல்வா எடிசன்



அலெக்ஸாண்டர்
கிரகாம் பெல்



12th_History_TM_Unit_11_V2.indd 193 2/4/2020 10:57:02 AM

ஒரு கிராமிய சமூகமாக இருந்த அமெரிக்காவை, ஒரு நகர்ப்புற சமூகமாக மாற்றம் பெறச் செய்யும் செயல்பாட்டினைத் தொழிற்புரட்சி வேகப்படுத்தியது. பண்ணைகளில் வளர்ந்த இளம் வயது மக்கள் நகரங்களில் வாய்ப்புகள் அதிகமாக கிடைத்தால் நகரங்களுக்குச் சென்றனர். முன்னெப்போதும் இருந்திராத அளவில் நகரமயமாதலும் ஆட்சிப்பரப்பு விரிவாக்கமும் அமெரிக்காவில் நடைபெற்றது. அதன் விளைவாக 1860–1900 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பதினான்கு மில்லியன் மக்கள் அமெரிக்காவிற்கு வந்தனர். பல்வகைப்பட்ட தொழிற்சாலைகளில் தொழிலாளர்களாக வேலை செய்தனர்.

### தொழிற்புரட்சியின் தாக்கம்

- மறுமலர்ச்சி மக்களின் வாழ்க்கையைப் பற்றிய அணுகுமுறையை மாற்றியமைத்தது எனில், தொழிற்புரட்சி விவசாய காலம் தொட்டு அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையின் பாதையையே மாற்றியது. ஆலைகள் இயந்திரமயமானதின் விளைவாக உற்பத்தி மிகப்பெருமளவிற்குப் பெருகியது. அதனால் செல்வமும் பெருகியது. ஆனால் அவ்வாறு பெருகிய செல்வம் புதிய தொழிற்சாலைகளின் முதலாளிகளாய் இருந்த சிறு குழுவுக்கே சென்றது.
- தொழிற்புரட்சி உற்பத்தியில் இருந்த பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தது. ஆனால் புதிதாக உருவாக்கப்பட்ட செல்வத்தை விநியோகிப்பதில் ஏற்பட்ட பிரச்சனைகளை அதனால் தீர்க்க இயலவில்லை.
- இயந்திரங்களைப் பயன்படுத்தி பொருளுற்பத்தி செய்வோர்கள் கைவினைத் தொழில்களைப் பாழ்படுத்தினர். ஆயிரக்கணக்கான கைவினைஞர்களும் நெசவாளர்களும் வேலையற்றவர்களாயினர்.
- தொழிற்புரட்சியின் முதற்கட்டத்தில் இயந்திரங்கள் அறிமுகமானபோது பெண்கள், குழந்தைகள் ஆகியோரிடமிருந்து மலிவான விலையில் உழைப்பு பெறப்பட்டதால் உடல் வலுமிக்க ஆண்கள் வேலைகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர். மேலும் பல தொழிற்சாலைகளும் சுரங்கங்களும் ஆபத்து நிறைந்தவையாயும் சுகாதாரமற்றவையாகவும் இருந்தன.
- தொழிற்புரட்சியின் மிக முக்கியமான விளைவு ஆலை முதலாளிகள், ஆலைத் தொழிலாளர்கள் என இரண்டு வர்க்கங்கள் உருவாக்கப்பட்டதுவே தங்கள் உற்பத்திப் பொருட்களைப் பாதுகாக்கக் காப்புவரி விதிப்பது, தொழிலாளர்களின் போராட்டங்களை ஒடுக்குவது ஆகிய இவ்விரு விஷயங்களைக் கடந்து ஏனையவற்றில் அரசு தலையிடுவது முதலாளிகளுக்கு ஒவ்வாமையாக இருந்தது. வலிமையான பொருளாதார வளர்ச்சிக்கு, புதிய முயற்சிகளுக்கு முழுமையான சுதந்திரம் வழங்கப்படுவது, முற்றிலும் இன்றியமையாதது என முதலாளிகள் வற்புறுத்திக் கூறினர்.
- ஆலைத் தொழிலாளர் என்ற புதிய வர்க்கம் அவ்வளவு எளிதாகத் துன்பங்களை, ஏற்றுக்கொள்ளவில்லை. நெப்போலியப் போர்களின் இறுதியில் வலுவான எதிர்ப்பலைகள் வீசத் துவங்கின. இயந்திரங்களை உடைப்பது, பெரும் எண்ணிக்கையில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்வது, தொழிலாளர் சங்கங்கள் உருவாக்குவது என பலகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**பீட்டர்லூ படுகொலை:** 1819ஆம் ஆண்டு தொழிலில் மந்தநிலையும் உணவுப்பொருட்களின் விலையேற்றமும் ஏற்பட்ட ஆண்டாகும். பெண்களும் குழந்தைகளும் உட்பட 60,000 அதிருப்தியுற்ற மக்கள் ஹென்றி ஹன்ட் எனும் தீவிரவாதத் தலைவரின் தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களில் யாரும் ஆயுதம் வைத்திருக்கவில்லை. ஆர்ப்பாட்டமும் அமைதியான முறையில் நடைபெற்றது. கூட்டத்தின் எண்ணிக்கையையும் அவர்களின் மனநிலையையும் கண்டு பீதியடைந்த அதிகாரிகள் மான்செஸ்டர் யோமனரி எனும் தன்னார்வ குதிரைப்படை காவலர்களைக் கொண்டு கூட்டத்தினரைத் தாக்க உத்தரவிட்டனர். 700க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர், 17 நபர்கள் கொல்லப்பட்டனர். ஹனட்டும் ஏனைய தீவிரவாதத் தலைவர்களும் கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு, தண்டனை வழங்கப்பட்டது.

**டோல்புடில் குற்றவழக்கு:** இங்கிலாந்தின் விக் அரசாங்கம் தொழிலாளி வர்க்கத்தாரிடையே வளர்ந்து வரும் அதிருப்தியைக் கண்டு அச்சம் கொண்டு, 1834இல் அறிவிக்கப்பட்ட ஊதிய வெட்டுக்கு



12th_History_TM_Unit_11_V2.indd 194 2/4/2020 10:57:02 AM

எதிராக தொழிலாளர்களை ஒன்று திரட்டியதற்காக ஆறு டோல்புடில் தொழிலாளர்களைக் கைது செய்தது. அவர்கள் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டு, தண்டனையாக ஏழு வருடங்களுக்கு ஆஸ்திரேலியாவில் இருந்த தண்டனைக் காலனிக்கு நாடு கடத்தப்பட்டனர். அவர்கள் ஆறுபேரும் தொழிலாளர்களுக்காக உயிர்துறந்த தியாகிகள் ஆயினர்.

**அமெரிக்காவில் மாபெரும் இருப்புப்பாதை வேலை நிறுத்தம் (1877):** ஆலைகளில் நிலவிய மோசமான வேலைச் சூழல், பலமணி நேர வேலை, குறைந்த ஊதியம், பெண்களும் குழந்தைகளும் சுரண்டப்பட்டது உட்பட அனைத்தும் சேர்ந்து அமெரிக்காவில் தொழிற்சங்கங்கள் உருவாகப் பங்களிப்பு செய்தன. உள்நாட்டு போருக்குப் பின்னர் தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்களை நடத்தினர். அவற்றில் மிகப்பெரும் வேலை நிறுத்தம் 1877இல் நடைபெற்ற இருப்புப்பாதைத் தொழிலாளர் வேலை நிறுத்தமாகும். நீண்ட பொருளாதார மந்தம் நிலவிய சூழலில் இருப்புப்பாதைத் தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஊதியவெட்டு வேலை நிறுத்தத்திற்கு இட்டுச் சென்றது. அமைதிப் பாதுகாப்புக் குழுவினர், தேசியக் காவலர்கள், ஐக்கிய அரசின் இராணுவம் ஆகிய அமைப்புகளால் வேலைநிறுத்தம் நசுக்கப்பட்டது.

**ஹேமார்கெட் படுகொலை:** 1886 மே 4இல் சிக்காகோ நகரின் ஹேமார்கெட் சதுக்கத்தில், தொழிலாளர்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். நாளொன்றுக்கு எட்டு மணிநேர வேலை எனும் கோரிக்கைக்குப் போராடும் தொழிலாளர்களுக்கு ஆதரவாகவும் முந்தைய தினம் நடைபெற்ற போலீஸ் தாக்குதலில் பல தொழிலாளர்கள் கொல்லப்பட்டதற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் அமைதியான ஊர்வலம் தொடங்கியது. காவலர்கள் கூட்டத்தைக் கலைக்க முற்படுகையில் யாரோ ஒருவர் டைனமைட் குண்டை போலீசார் மீது வீசினார். குண்டு வெடிப்பைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடு ஆகியவற்றில் ஏழு காவல்துறை அதிகாரிகளும் நான்கு பொதுமக்களும் கொல்லப்பட்டனர். எண்ணற்றோர் காயமடைந்தனர். ஹேமார்கெட் நிகழ்வை நினைவு கொள்ளும் வகையில் 1887 மே 1 தொழிலாளர் தினமாக அல்லது மே தினமாக அல்லது உலக உழைப்பாளர் தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

## பாடச் சுருக்கம்

- இங்கிலாந்தின் தாங்கிக்கொள்ள முடியாத அடக்குமுறை சார்ந்த வரிவிதிப்புப்படி நடவடிக்கைகளும், காலனி மக்களின் எதிர்ப்பும் இவை எவ்வாறு அமெரிக்க விடுதலைப் போர் வெடிப்பதற்கு இட்டுச்சென்றது என்பதும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- விடுதலைப் போரின் போக்கும் அதன் விளைவுகளும் இப்புரட்சியின் முக்கியத்துவமும் மதிப்பிடப்பட்டுள்ளன.
- தேசிய சட்டமன்றம் உருவாக்கப்பட்டதும் அது வெளியிட்ட மனிதன் மற்றும் குடிமக்கள் உரிமைப் பிரகடனமும் விவரிக்கப்பட்டுள்ளது.
- பிரெஞ்சு அரசருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படல், முடியாட்சி ஒழிப்பு, ஜேக்கோபியர்களின் ஆதிக்கத்திலிருந்த தேசியப் பேரவை மேற்கொண்ட பணிகள் ஆகியன விரித்துரைக்கப்பட்டுள்ளன.
- பிரான்சின் கட்டுப்பாட்டிலிருந்த செயின்ட் டோமிங்கோவில் ஏற்பட்ட புரட்சி, அதனைத் தொடர்ந்து லத்தீன் அமெரிக்க நாடுகளான வெனிசுலா, கொலம்பியா, மெக்சிகோ, பிரேசில் ஆகியனவற்றில் நடந்த புரட்சிகள் சிறப்பு கவனத்துடன் விளக்கப்பட்டுள்ளன.
- இங்கிலாந்தில் நடைபெற்ற தொழிற்புரட்சியின் இன்றியமையாக் கூறுகளும் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்கள், ஜவுளி, இரும்பு ஆலைத் தொழில்களில் நீராவியின் பயன்பாட்டால் ஏற்பட்ட புரட்சிகரமான மாறுதல்கள், போக்குவரத்து, செய்திப் பரிமாற்றம் ஆகியவற்றில் நடந்த மாற்றங்கள் குறித்து கூறப்பட்டுள்ளன.
- மேற்கு ஐரோப்பாவில் குறிப்பாக ஜெர்மனியிலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் நடைபெற்ற இரண்டாவது தொழிற்புரட்சி ஆய்வு செய்யப்பட்டுள்ளது.
- தொழிற்புரட்சியின் தாக்கமும், அணி திரட்டப்பட்ட தொழிலாளர் இயக்கங்களின் மீது இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் மேற்கொள்ளப்பட்ட அரசு வன்முறை ஆகியன தொடர்புப்படுத்தப்பட்டுள்ளன.



12th_History_TM_Unit_11_V2.indd 195 2/4/2020 10:57:02 AM

## பயிற்சி

Q2T4N5

**I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. வட அமெரிக்காவில் முதன் முதலில் குடியேறிய ஐரோப்பியர்கள் ________

   (அ) போர்த்துகீசியர் (ஆ) ஸ்பானியர்

   (இ) டேனியர் (ஈ) ஆங்கிலேயர்

2. நியூ ஆம்ஸ்டர்டாமிற்கு ________ என மறுபெயர் சூட்டப்பட்டது.

   (அ) வாஷிங்டன் (ஆ) நியூயார்க்

   (இ) சிக்காகோ (ஈ) ஆம்ஸ்டர்டாம்

3. **கூற்று:** ஆங்கிலேயர் நாவாய்ச் சட்டங்களை இயற்றினர்

   **காரணம்:** காலனி நாடுகளின் உற்பத்திப் பொருட்கள் ஆங்கிலேயக் கப்பல்களின் மூலமாக மட்டுமேஏற்றுமதிசெய்யப்படவேண்டுமென்பதைச் இச்சட்டம் கட்டாயப்படுத்தியது.

   (அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

   (ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

   (இ) கூற்று சரி. காரணம் தவறு

   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

4. **கூற்று:** 1770இல் இங்கிலாந்து தேயிலையைத் தவிர ஏனைய பொருட்களின் மீதான வரிகளை ரத்து செய்தது.

   **காரணம்:** காலனி நாடுகளின் மீது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வரிவிதிக்கும் உரிமை ஆங்கிலேய பாராளுமன்றத்திற்கு உண்டு என்பதை உறுதிப்படுத்தவே தேயிலையின் மீதான வரி தக்கவைத்துக் கொள்ளப்பட்டது.

   (அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

   (ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

   (இ) கூற்று சரி. காரணம் தவறு.

   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

5. பாஸ்டன் தேநீர் விருந்து நிகழ்வு ________ இல் நடைபெற்றது.

   (அ) 1775 (ஆ) 1773 (இ) 1784 (ஈ) 1799

6. **கூற்று:** ஜார்ஜியா தவிர ஏனைய காலனிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பொறுத்து கொள்ளமுடியாதச் சட்டங்கள் நீக்கப்பட வேண்டுமெனக் கோரினர்.

   **காரணம்:** அதுவரையிலும் ஆங்கிலப் பொருட்களைப் புறக்கணிப்பது என காங்கிரஸ் முடிவு செய்தது.

   (அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

   (ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

   (இ) கூற்று சரி. காரணம் தவறு.

   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

7. கீழ்க்காணும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை.

   **கூற்று I:** 1776 ஜூலை 4இல் பதின்மூன்று காலனிகளும் இங்கிலாந்திடமிருந்து விடுதலை பெற்றதாக அறிவித்தன.

   **கூற்று II:** சுதந்திரப் பிரகடனத்தைத் தயாரித்ததில் தாமஸ் ஜெபர்சன் மிக முக்கியப் பங்கினை வகித்தார்.

   (அ) I (ஆ) II

   (இ) இரண்டும் தவறு (ஈ) இரண்டும் சரி

8. அமெரிக்க சுதந்திரப் போரில் ஆங்கில படைகளுக்குத் தலைமை தாங்கியவர்

   (அ) ரிச்சட்டு லீ (ஆ) ஜார்ஜ் வாஷிங்டன்

   (இ) வில்லியம் ஹோவே (ஈ) ராக்கிங்காம்

9. கீழ்க்காணும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

   **கூற்று I:** பிரெஞ்சு சமூகத்தின் பெரும்பகுதி விவசாயிகளால் ஆனது.

   **கூற்று II:** பிரெஞ்சு விவசாயிகள் பண்ணை அடிமைகளாய் இருந்தனர்.

   **கூற்று III:** வாரத்தில் சில நாட்களில் விவசாயிகள் தங்கள் பிரபுக்களுக்காகச் சம்பளம் பெற்றுக் கொண்டு வேலை செய்தாக வேண்டும்.

   (அ) I மற்றும் II (ஆ) II மற்றும் III

   (இ) I மற்றும் III (ஈ) அனைத்தும் சரி

10. டென்னிஸ் மைதான உறுதிமொழிக்கு இட்டுச் சென்ற எதிப்புக்குத் தலைமையேற்ற பிரபு ________ ஆவார்.

    (அ) மாரட் (ஆ) டாண்டன்

    (இ) லஃபாயட் (ஈ) மிராபு



12th_History_TM_Unit_11_V2.indd 196 2/4/2020 10:57:02 AM

11. **கூற்று:** வளர்ந்து கொண்டிருந்த பூர்ஷ்வாக்கள் தங்கள் சமூகத்தகுதிக்கு நிகரான அரசியல் அதிகாரம் வேண்டினர்.

**காரணம்:** அரசாங்கத்தில் செல்வாக்குப் பெற வேண்டுமென அவர்கள் விரும்பினர்.

(அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

(ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

(இ) கூற்று சரி. காரணம் தவறு.

(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

12. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| | |
|---|---|
| (அ) மாண்டெஸ்கியூ | 1. ஜேகோபியர்கள் |
| (ஆ) வால்டர் | 2. ஆங்கிலேய நாட்டுத் தத்துவவாதி |
| (இ) பயங்கர ஆட்சி | 3. பதினான்காம் லூயியின் காலம் |
| (ஈ) ஜான் லாக் | 4. சட்டங்களின் சாரம் |

(அ) 1 3 4 2　　(ஆ) 4 3 1 2

(இ) 4 1 2 3　　(ஈ) 1 4 3 2

13. பாஸ்டில் சிறை தகர்ப்பு ________ இல் நடந்தது.

(அ) 1789, ஜூன் 5　　(ஆ) 1789, ஜூலை 14

(இ) 1789, நவம்பர் 11　　(ஈ) 1789, மே 1

14. பிரெஞ்சுப் புரட்சியின் போது அறிவிக்கப்பட்ட மனிதன் மற்றும் குடிமக்கள் உரிமைகள் பிரகடனம் பெண்களைத் தவிர்த்துவிட்டதால் அதன் மேல் ________ அதிருப்தி கொண்டிருந்தார்.

(அ) ஒலிம்பே டி கோஜெஸ்

(ஆ) மேரி அன்டாய்னெட்

(இ) ரோஜெட் டி லிஸ்லி

(ஈ) ரோபஸ்பியர்

15. பதினாறாம் லூயியின் அதிகாரபூர்வமான வசிப்பிடமாக இருந்தது.

(அ) வெர்செய்ல்ஸ்　　(ஆ) தௌலன்

(இ) மார்செய்ல்ஸ்　　(ஈ) டியூலெர்ஸ்

16. ________ தொடக்கத்தில் செயின்ட் டோமிங்கோ என அறியப்பட்டது.

(அ) மெக்சிகோ　　(ஆ) பனாமா

(இ) ஹைட்டி　　(ஈ) ஹவானா

17. மெக்சிகோவில் புரட்சிக்குத் தலைமையேற்றவர் ________.

(அ) சைமன் பொலிவர்

(ஆ) ஜோஸ் மரியா மோர்லோ

(இ) பெர்டினான்டு டி லெஸ்ஸெப்ஸ்

(ஈ) மிகுவல் ஹிடல்கோ

18. அர்ஜென்டினாவை விடுதலையடையச் செய்தவர் ________.

(அ) சான் மார்ட்டின்

(ஆ) டாம் பெட்ரோ

(இ) பெர்னார்டோ ஓ ஹிக்கின்ஸ்

(ஈ) மரினா மோர்லஸ்

19. ________ நகரம் 'காட்டன்பொலிஸ்' எனும் புனைப் பெயரைப் பெற்றது.

(அ) மான்செஸ்டர்　　(ஆ) லங்காசயர்

(இ) லிவர்பூல்　　(ஈ) கிளாஸ்கோ

20. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| | |
|---|---|
| (அ) மைக்கேல் பாரடே | 1) ஆர்க்ரைட் |
| (ஆ) எலியாஸ் ஹோவே | 2) ராபர்ட் புல்டன் |
| (இ) நீர்ச் சட்டகம் | 3) மின்சாரம் |
| (ஈ) நீராவிப் படகு | 4) தையல் இயந்திரம் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| (அ) | 1 | 3 | 4 | 2 |
| (ஆ) | 1 | 4 | 2 | 3 |
| (இ) | 3 | 4 | 1 | 2 |
| (ஈ) | 3 | 4 | 2 | 1 |

## II. குறுகிய விடையளிக்கவும்.

1. வட அமெரிக்காவின் ஐரோப்பியக் காலனிகள் பூர்வகுடி மக்கள் மீது எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தின?
2. பாஸ்டன் தேநீர் விருந்து குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
3. அமெரிக்க விடுதலைப் போருக்குத் தாமஸ் பெயினின் அறிவுத்திறன் சார்ந்த பங்களிப்பு என்ன?
4. சரடோகா போரின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.



12th_History_TM_Unit_11_V2.indd 197　2/4/2020 10:57:02 AM

5. பண்டைய ஆட்சி முறையின் மூன்று எஸ்டேட்டுகளை விவாதிக்கவும்.
6. மனிதன் மற்றும் குடிமக்களின் உரிமைப் பிரகடனத்தின் சாரம்சத்தை அடிக்கோடிட்டுக் காட்டவும்.
7. இலத்தீன் அமெரிக்க விடுதலைக்கு சைமன் பொலிவரின் பங்களிப்பை சுருக்கமாய் வரைக.
8. தொழிற்புரட்சியின் சிறப்புக்கூறுகளை முன்னிலைப்படுத்திக் காட்டவும்.
9. சாமுவெல் சிலேட்டர் ஏன் அமெரிக்கத் தொழிற்புரட்சியின் தந்தையெனக் கருதப்படுகிறார்?
10. பீட்டர்லூ படுகொலையின் பின்னணி யாது?

### III. சுருக்கமான விடையளிக்கவும்.

1. 1783இல் கையெழுத்திடப்பட்ட பாரிஸ் உடன்படிக்கையின் முக்கியச் சரத்துக்களை விவாதிக்கவும்.
2. அமெரிக்க புரட்சியின் முக்கியத்துவத்தை பகுப்பாய்வு செய்க.
3. "1789ஆம் ஆண்டு புரட்சிக்கு நீண்ட காலத்திற்கு முன்னதாகவே கருத்துக்களின் களத்தில் ஒரு புரட்சி நடந்தது" – விளக்குக.
4. "செப்டம்பர் படுகொலைகள்" எதனால் ஏற்பட்டது?
5. தென்அமெரிக்காவில் முதன்முதலாகப் பிரேசிலில் அரசியலமைப்பு சார்ந்த முடியாட்சி அரசு அமைந்ததற்கான சூழ்நிலைகளை எடுத்துரைக்கவும்.
6. தொழிற்புரட்சியின் இரண்டாம் கட்டத்தில் ஜெர்மனியில் நடந்தது என்ன?

### IV. விரிவான விடையளிக்கவும்.

1. அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள், அதன் போக்கு, விளைவுகள் குறித்து விவாதிக்கவும்.
2. பாஸ்டில் சிறை தகர்ப்பு முதல் ரோபஸ்பியர் கொல்லப்பட்டது வரையிலுமான பிரெஞ்சுப் புரட்சியின் போக்கினை வரைக.
3. "அமெரிக்க புரட்சியும் பிரெஞ்சுப் புரட்சியும் ஹைட்டியில் புரட்சி ஏற்படத் தூண்டுகோலாய் அமைந்தன". இக்கூற்றை உறுதிப்படுத்தவும்.
4. தொழிற்புரட்சி ஏன் முதலில் இங்கிலாந்தில் தொடங்கிற்று? நவீன சமூகத்தின் மீது அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது?

### V செயல்பாடுகள்.

1. அமெரிக்க புரட்சி வெற்றிபெறாமல் போயிருந்தால் என்ன நடைபெற்றிருக்கக்கூடும் என்பது குறித்து ஒரு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யலாம்.
2. பண்டைய ஆட்சி முறையின் மூன்று எஸ்டேட்டுகளைப் போல் மாணவர்களை மூன்று அணிகளாகப் பிரித்து, பதினாறாம் லூயியால் மே, 1789இல் கூட்டப்பட்ட தேசிய சட்டசபை போன்ற மாதிரிச் சட்டசபையின் அமர்வை நடத்திப் பார்க்கலாம்.
3. இயந்திரங்களும் தொழிற்சாலைமுறையும் அறிமுகமான சூழலில் இங்கிலாந்தில் கைவினைத்தொழில்கள் எவ்வாறு சீரழிந்தது என்பதை மாணவருக்கு உணர்த்தி, அதைப் போன்றதொரு சூழ்நிலை ஆங்கிலக் காலனியாட்சி நிறுவப்பட்ட பின்னர் இந்தியாவில் ஏற்பட்டதையும் எடுத்துரைக்கவும்.

## மேற்கோள் நூல்கள்


- William Doyle, *The Oxford History of the French Revolution*, Oxford University Press, 1989.
- Edward McNall Burns, *Western Civilizations,* Vols. 1 & 2, New York: W.W. Norton, eighth edition, 1973.
- Thomas H. Holloway, *A Companion to Latin American History,* Blackwell, 2011.
- Jeremy D. Popkin, *A Short History of the French Revolution,* Routledge, 2018.
- Chris Harman, *A People's History of the World,* Delhi: Orient Longman, 2007.
- Gordon S Wood, *The American Revolution: A History,* Modern Library, 2002.
- *Encyclopaedia Britannica*


## மேலும் வாசிக்கத்தகுந்த நூல்


- A. J. கிரான்ட், ஐரோப்பா – கடந்த ஐந்து நூற்றாண்டுகாலச் சரித்திரம், தமிழாக்கம்: வை. விருத்தகிரீசன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை (ஆவணப் பதிப்பு: ஆகஸ்ட் – 2017).

## A-Z கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| துணிவான சாகசங்கள் | **adventurous** | willing to undertake any task involving risks |
| அட்லாண்டிக் கடலுக்கு அப்பால் | **transatlantic** | across the Atlantic Ocean |
| 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் கோட்பாட்டிலும் வழிபாட்டிலும் எளிமை வேண்டுமெனக் கோரிய ஆங்கிலேய புராட்டஸ்டண்டுகள்; தூய நெறியினர் | **Puritans** | English Protestants in the 16th and 17th centuries who demanded the simplification of doctrine and worship |
| முற்றிலும் அழி, நிர்மூலமாக்கு | **extirpate** | destroy completely |
| படுகொலை | **massacre** | mass murder |
| துணை உற்பத்திப் பொருள், துணை விளைபொருள் | **byproduct** | a product made during the manufacture of something else / a secondary product |
| நகல் / பிரதி | **replica** | an exact copy or model of something |
| முன்பிருந்த நிலை | **status quo** | the existing state of affair |
| நடுத்தரவகுப்பினர்/ உற்பத்திக் காரணிகளையும் சமூகத்தின் பெரும்பான்மையான செல்வத்தையும் தங்களிடம் கொண்டுள்ள முதலாளி வர்க்கம் | **bourgeoisie** | the middle class / the capitalist class who own means of production and possess most of society's wealth |



12th_History_TM_Unit_11_V2.indd 199 2/4/2020 10:57:03 AM